# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்


வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஜுலை 05 2019. இதழ் - 69









**பிண அரசியலும் சமரசமும்!**

பிணத்தை, சடலத்தை (உடலம் என்றும் ஒரு புதுச் சொல் ...

பக்கம் - 03



**ஆயுதம் ஏந்தப் போவதாக எச்சரிக்கும் தலைவர்கள்....**


தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கா விட்டால் ஆயுதம் ஏந்திப் போராடுவது

பக்கம் - 10

**கற்போம்**

தமிழ், கணிதம், விஞ்ஞானம்

பக்கம் -13 . 14



**உன்னிச்சைக் குளமும் முற்றாக வற்றிவிடுமோ?,,**

பொன்னைக்கொடுத்து நீரை வாங்கும் நிலைமையும் வரலாம்?

பக்கம் - 07



## பாடசாலைக்குள் அத்துமீறிச் சென்றவர் மீது துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி- காலி அக்மீமனவில் சம்பவம்

--- நி.அமரித்ஸன் ---

தென் மாகாணம் காலி மாவட்டம் அக்மீமனப் பிரதேசத்தில் உள்ள உபானந்த வித்தியாலயத்தில பாதுகாப்புக் கடைமையில் இருந்த இராணுவச் சிப்பாயொருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அடையாளம் தெரியாத ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளர்.

வியாழக்கிழமை காலை இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காவல் கடையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாயின் துப்பாக்கியை பலாத்காரமாக பறிக்க முற்பட்டபோதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் ருவான் குணசேகர கூறியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நபர் உடனடியாக காலி கரகாப்பிட்டிய வைத்தியசாலயில் அனுமதிக்கப்பட்டதாகவும் ஆனாலும் சிக்சிசை பலனின்றி அவர் உயிரிழந்தாகவும் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

ஆனால் குறித்த நபர் காவல் கடையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தின் உத்தரவை மீறி பாடசாலை வளாகத்திற்குள் செல்ல முற்பட்டதாகவும் இதனாலேயே அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நபர் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவரென பொலிஸார் தெரிவிக்கவில்லை. ஆனால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

தொடர்ச்சி... (பக்கம் -15)

## போக்குவரத்து பொலிசாரின் கைத் துப்பாக்கியை பறித்துச் சென்றனர்



மட்டக்களப்பு புதுநகர் திமிலைதீவு பிரதேசத்தில் வியாழக்கிழமை (27) பகல் போக்குவரத்து பொலிசார் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது அங்கு வந்தவர்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையில் பொலிஸ் ஒருவரின் கைதுப்பாக்கியை ஒருவர் பறித்துச் சென்றதையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மட்டு தலைமையகப் பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள புதுநகர் திமிலைதீவு ஆலயத்துக்கு அருகில் பகல் 11 மணியளவில் வீதி போக்குவரத்து பொலிசார் இருவர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு, இருவர் தலைகவசம்

தொடர்ச்சி... (பக்கம் -15)

## மட்டக்களப்பில் யானைகள் தாக்கி இருவர் பலி



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரு நாட்களுக்குள் இருவர் யானைகளின் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

வாழைச்சேனை கொண்டையன் கேணியைச் சேர்ந்த சி. கந்தசாமி என்ற விவசாயி தனது மனைவியுடன் வயலுக்குச் சென்றபோது யானையினால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். ஆனாலும், அவரது மனைவி உயிர் தப்பியுள்ளார்.

வேப்பையடித்திடல் என்ற இடத்தில் இவர்கள் மீது காட்டு யானை தாக்கியதாக கூறப்படுகின்றது.

இதேவேளை நேற்று முந்தினம் மட்டக்களப்பு கரடியனாறு குசலான் மலைப் பிரதேசத்தில் வைத்து பங்குடாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த ஆடு மேய்க்கும் ஒருவரும் காட்டு யதனையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரயில்வே வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது



அரசாங்க தரப்பினருடனான பேச்சுவார்த்தைகளை அடுத்து ரயிவே தொழிற்சங்கங்கள் தமது வேலை நிறுத்தத்தை கைவிட்டுள்ளன.

தொடர்ச்சி... (பக்கம் -15)



# யோகாசனப் போட்டியில் மட்டக்களப்பு மாணவர்களின் சாதனை

கொழும்பில் இடம்பெற்ற யோகாசனப் போட்டியில் மட்டக்களப்பு சக்தி ஆனந்த யோகா வித்தியாசாலை மாணவிகள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றனர். கொழும்பு அஷ்டாங்கயோக மந்தீர் ஏற்பாடு செய்து, கொழும்பு சுவாமி விவேகானந்தா கலாசார மையத்தின் அனுசரணையுடன் இலங்கையில் முதல்



தடவையாக பாரிய அளவில் யோகாசனப் போட்டிகள் 2019.06.22 அன்று கொழும்பில் நடைபெற்றது. இப் போட்டி நிகழ்ச்சியில் இலங்கையின் அனைத்து பிரதேசங்களில் இருந்தும் சுமார் நாற்பத்தாறு யோகாசன நிறுவனங்கள் பங்கு கொண்டன.

இப் போட்டியில் 8 வயதிற்கு மேற்பட்ட ஏறத்தாழ 400 போட்டியாளர்கள் பங்குகொண்டனர். சக்தி ஆனந்த யோகா வித்தியாசாலையில் இருந்து 15 மாணவர்கள் பங்குபற்றினர். முதற் பிரிவில் (8 வயது தொடக்கம் 13 வயது வரை) ஏறத்தாழ 130 மாணவர்கள் போட்டியிட்டனர். இப்பிரிவில் தங்கப் பதக்கத்தை (1வது இடத்தை) லீஸா லோகேஸ்வரன் மற்றும் வெள்ளிப் பதக்கத்தை (2வது இடத்தை) சப்தமி நிமலராஜ் ஆகிய இருவரும் சக்தி ஆனந்த யோகா வித்தியாசாலை சார்பாக வெற்றிபெற்றனர்.

# கிளிவெட்டியில் தமிழ்ப்பாடச் செயலமர்வு



தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்டக் கிளை (இலங்கை) 2019இல் க.பொ.த (உ.த) பரீட்சையில் தமிழ்ப் பாடத்துக்குத் தோற்றவுள்ள மூதூர்க் கல்வி வலய மாணவர்களுக்குத் தமிழ்ப் பாடச் செயலமர்வினை மூதூர்க் கல்வி வலயத்திலுள்ள தி/மூ/ கிளிவெட்டி மகா வித்தியாலயத்தில் 2019.06.28இல் நடத்தியது. இது, தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையினது மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் (இலங்கை) இரண்டாவது செயற்பாடாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையினது தலைவரும் ஓய்வு பெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு.எஸ்.மனோகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இச்செயலர்வில் ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி செ.யோகராசா, ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்(தமிழ்) திரு.த.யுவராஜன் ஆகியோர் வளவாளர்களாகச் செயற்பட்டனர். பொருளாளர் திருமதி ரமணி ஜெயபாலன், திருமதி கமலினி உருத்திரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.
இச்செயலமர்விற்காக வெவ்வேறு பாடசாலைகளிலிருந்து வந்த மாணவர்களையும் தமது மாணவர்கள் போல் கவனித்துச் செயற்பட்ட தி/மூ/ கிளிவெட்டி மகா வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள்; தலைவர் திரு.எஸ்.மனோகரன் அவர்களால் தலைமையுரையின் போது பாராட்டப்பட்டனர்.

மேலும் தமதுரையில் தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையின் நிறுவுநரும் தலைவருமான சேக்கிழார் அப்பாசாமி மற்றும் தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையின் பன்னாட்டு இணைப்பாளர் முல்லை நாச்சியார் ஆகியோர் தமிழ்மொழி இருப்புக்காக மேற்கொள்ளும் செயற்பாடுகள் தொடர்பாகவும் குறிப்பிட்டார். தி/மூ/ கிளிவெட்டி மகா வித்தியாலய மாணவிகள் தேவாரத்தையும் அதைத் தொடர்ந்து தமிழ்மொழி வாழ்த்தையும் பாடி, செயலமர்வைத் தொடங்கிவைத்தனர்.

'இலக்கணம் என்பது கசப்பானது' என்ற விடயம் பொதுவாக மாணவர்களிடம் ஆழமாய்ப் பதிந்துள்ளது. ஆனால் இந்தச் செயலமர்வின் பின்னர் 'இலக்கணம் என்பது இனிப்பானது - இலகுவானது' என்னும் நிலைக்கு மாறியிருந்ததை மாணவர்களின் கருத்து முன்வைப்பின் போது அறியக்கூடியதாக இருந்தமையை தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையினது செயலாளரும் வளவாளர்களுள் ஒருவராகச் செயற்பட்டவருமான ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்(தமிழ்) திரு.த.யுவராஜன் அவர்கள் சுட்டிக்காட்டியதுடன் தமிழ் இலக்கியத்தையோ தமிழ் இலக்கணத்தையோ மாணவர்கள்
தொடர்ச்சி... (பக்கம் -15)

# உகந்தமலையில் கொடியேற்றம்

காரைதீவு நிருபர் சகா



வரலாற்றுப் பிரசித்திபெற்ற உகந்தமலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல்விழாவிற்கான கொடியேற்றம் கடந்த புதன்கிழமை காலை கோலாகலமாக நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ ஆலயத்தலைவர் சுதுநிலமே திசாநாயக்க(சுதா) கொடியைத்தாங்கிவர ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.க.கு. சீதாராம் குருக்கள் கொடியேற்றத்தை மிகச்சிறப்பாக நடாத்திவைத்தார்.
அவருக்கு தவியாக சிவஸ்ரீ.ஆ.கோபிநாதசர்மா சிவஸ்ரீ. சீ.கு.கௌரிசங்கர் குருக்கள் சிவஸ்ரீ சீ.கு.கோவர்த்தனசர்மா ஆகியோர் செயற்பட்டனர்.

வழமைக்குமாறாக கிழக்குமாகாணத்தின் சகல பாகங்களிலுமிருந்தும் சுமார் 5000 அடியார்கள் ஆலய வளாகத்தில் ஒன்று கூடியிருந்தனர்.
சிங்கள பௌத்தமக்களும் கலந்துகொண்டிருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர் கவி.கோடீஸ்வரனும் சமுகமளித்திருந்தார்.

கொடியேற்றத்தன்று கதிர்காமத்திற்கான பாதயாத்திரையிலீடுபடும் 4500 யாத்திரீகர்களும் இக்கொடியேற்றத்தை கண்டு காட்டுக்குள் பிரவேசித்தார்கள்.

# "போதைப்பொருளை ஒழிக்க ஒன்று கூடுவோம்" மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்




மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகஸ்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போதைப்பொருளுக்கு எதிராக செயற்பட்டு, மட்டக்களப்பு மாவட்டத்தில் போதை அரக்கனை விரட்டியடிக்க முன்வாருங்கள் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் அழைப்புவிடுத்தார்.

தேசிய போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தினையொட்டி போதையிலிருந்து விடுபட்ட நாட்டினை உருவாக்கும் என்ற ஜனாதிபதியின் செயற்திட்டத்துக்கமைய இறுதி நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன.

தேசிய போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான இறுதி நிகழ்வு திங்கட்கிழமை(1.7.2019) மாலை 4.00 மணியளவில் மட்டக்களப்பு காந்திபூங்காவில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந், திருமதி.நவரூபரஞ்சினி முகுந்தன்(காணி), உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், பிரதம கணக்காளர் க.ஜெகதீஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. சசிகலா புண்ணியமூர்த்தி,பிரதேச செயலாளர்கள்,உதவிச்செயலாளர் கள்,மாவட்ட செயலக திணைக்கள தலைவர்கள்,உத்தியோகத்தர்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது நிகழ்வின் ஆரம்பத்தில் போதைப்பாவனையினை தடுக்கும் வகையிலான உறுதிமொழி வாசிக்கப்பட்டு அதனை அனைவரும் சத்தியப்பிரமாணம் செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து போதைப்பாவனையினை தடுக்கும் கையெழுத்துப்பெறும் பணியினை மாவட்ட அரசாங்க அதிபர்
தொடர்ச்சி... (பக்கம் -15)


# போதையில் கார் ஓட்டுவோர் கைதாவர்

நாளை முதல் ஒருமாத காலத்திற்கு அமுலில் இருக்கும் வகையில் போதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்கு விஷேட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக விளக்கமளித்த பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர தகவல் தெரிவிக்கையில் 2018ஆம் ஆண்டில் போதையில் வாகனங்களை செலுத்திய 1,50,094 சாரதிகள் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு முதல் 5 மாத காலப்பகுதியில் போதையில் வாகனத்தை செலுத்திய 36 359 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். நாளை முதல் ஒருமாத காலத்துக்கு நாடு முழுவதிலும் அமுல்படுத்தும் வகையில் போதையில் வாகனத்தை செலுத்தும் சாரதிகளை கைது செய்வதற்கான விஷேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த நடவடிக்கையின் கீழ் பொலிஸாருக்கு விஷேட பரிசுகளும் வழங்குவதற்கு பொலிஸ் தலைமைத்துவம் தீர்மானித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
தொடர்ச்சி... (பக்கம் -15)

# முதலாவது பண்டைய தொழில்நுட்ப நூதனசாலையும் நூலகமும்



பண்டைய தொழில்நுட்ப நூதனசாலையும் நூலகமும் பொலன்னறுவையில் நேற்று முந்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

900 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நாட்டின் முதலாவது பண்டைய தொழில்நுட்ப நூதனசாலையும் நூலகமும் இதில் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் தலைமையில் இது தொடர்பான நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நவீன யுகத்திற்கு பொருத்தமான நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி மனித இனத்திடமிருந்த பண்டைய தொழிநுட்பத்தை பற்றி இன்றுள்ள மக்களுக்கு விளக்கும் வகையில் இந்த நூதனசாலை அமைந்துள்ளமை விஷேட அம்சமாகும்.
தொடர்ச்சி... (பக்கம் -15)

# பிண அரசியலும் சமரசமும்!

பிணத்தை, சடலத்தை (உடலம் என்றும் ஒரு புதுச் சொல் வைத்திருக்கிறார்கள், அது சரியான சொல்லா என்று எனக்கு தெரியவில்லை) வைத்து அரசியல் செய்தல் என்பது இங்கு இலங்கையில் புதிய விடயமல்ல.

ஒருவர் கொலை செய்யப்பட்டால், அல்லது மருத்துவமனையில் இருந்தபோது சரியாக மருத்துவர்கள் சிகிச்சை அளிக்காததால் இறந்துவிட்டால் அந்தப் பிணத்தை வைத்து போராட்டம் நடத்துவது ஒருவகை. இது இலங்கையிலும் இந்தியாவிலும் அடிக்கடி நடந்திருக்கும் விடயம். தமக்கு, அல்லது இறந்தவருக்கு நீதி கிடைப்பதற்காக போராடும் வகை இது. தமிழகத்தில் உயர் சாதிக்காரர்கள் மயானத்துக்கு போக வழி தராததால் பிணத்தை வழியில் வைத்து தலித்துகள் போராடும் நிகழ்வுகளும் நடந்திருக்கின்றன.

அடுத்த வகை, ஒருவரின் இறப்பை கொண்டாடி, அவரைப் பெருவீரனாகக் காண்பித்து அதன் மூலம் படைக்கு ஆட்சேர்ப்புச் செய்வது. இது தமிழ் இயக்கங்களில் மாத்திரமல்ல வேறு சந்தர்ப்பங்களிலும் நடந்திருக்கிறது. இது இன்னுமொரு வகை. இவையெல்லாம் ஒரு வகையில் அரசியல்தான்.

ஆனால், இப்போது இன்னுமொரு புதிய வகையும் உருவாகியிருக்கிறது. அதாவது ஒருவரது சடலத்தை(உடலத்தை?) எங்கள் மயானத்தில் புதைக்காதீர்கள் அல்லது எரிக்காதீர்கள் என்பது அது. இதுவும் ஒரு அரசியல்தான்.

குறிப்பாக கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய தற்கொலைக் குண்டுதாரிகளை தமது பகுதிகளில் அடங்கம் செய்யக்கூடாது என்று சில முஸ்லிம் ஊர்கள் மறுத்துள்ளன. அதனைக் காரணம் காண்பித்து மாற்றாக தமிழ் மக்களும் தமது பகுதிகளில் அந்த தாக்குதலாளிகளின் சடலத்தை அடக்கம் செய்ய மறுத்து போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இவையும் ஒரு பிண அரசியல்தான்.

முஸ்லிம் கிராமங்களைப் பொறுத்தவரை இந்த தாக்குதலாளிகளின் சடங்களை அடக்கம் செய்ய்ய இடமளிக்க மறுப்பது எந்த வகை நியாயம் என்று தெரியவில்லை. இவர்களின் இந்த நடவடிக்கைக்கு பொதுவான பயம் காரணமாக இருக்கலாம் என்று நியாயம் கூறப்பட்டாலும் அதனை ஏற்பது கடினமே.

நீங்கள் விரும்புகிறீர்களோ அல்லது விரும்பவில்லையோ அந்தத்

**சீவகன் பூபாலரட்ணம்**

தாக்குதலாளி உங்கள் இனத்தைச் சேர்ந்தவர்தான். அதனை நீங்கள் ஏற்றுத்தான் ஆகவேண்டும். ஒவ்வொரு இனத்திலும் நீங்கள் விரும்புபவரும் விரும்பாதவரும் பிறக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், அவரை நீங்கள் ஏற்றுத்தான் வாழ்ந்தாக வேண்டும். உங்களைச் சேர்ந்த, உங்கள் சமூகத்தைச் சேர்ந்த தாய், தந்தைக்குப் பிறந்தவர்தான் அந்த தாக்குதலாளி. அவர் உங்கள் மார்க்கத்தில் இருந்து தவறிவிட்டார் என்றாலும் அவரை நீங்கள் உங்கள் மார்க்கத்தில் இருந்து நீக்கிவிட்டாலும் அவரது சடலத்தை அடக்கம் செய்வதற்கான அடிப்படை உரிமையை நீங்கள் தடுக்க முடியாது. எந்த மதமும் அதனை மறுக்கும் என்றும் சொல்ல முடியாது.

எந்த மதம் அதனை மறுத்தாலும் அந்த மறுத்தல்தான் நிராகரிக்கப்பட வேண்டியதே ஒழிய, அந்த மனிதனை அடக்கம் செய்வதற்கான உரிமை மறுக்கப்படக் கூடியது அல்ல. இறந்த அனைவருக்கும் அவரது செயற்பாடு, நடாத்தை ஆகியவற்றுக்கு அப்பால் தனது சடலத்தை அடக்கம் செய்தல், எரித்தல் அல்லது வேறு மரியாதையான வழியில் இறுதி ஏற்பாட்டுக்கான உரிமை இருக்கிறது. அது மனித சமூகத்தின் அடிப்படை. அதற்குப் பிறகுதான் மதமும் அதன் கட்டுப்பாடுகளும்.

முஸ்லிம்கள் இந்த அடக்கத்துக்கு மறுத்ததால் அவர்கள் தமிழர்களும் அதே நிராகரிப்பைச் செய்ய தூண்டிவிட்டுள்ளனர். அந்த நிராகரிப்புக்கான தீர்மானங்களை நிறைவேற்றிய உள்ளூராட்சி சபைகளும் கண்டிக்கப்பட வேண்டியவையே. அவர்களது இந்தத் தீர்மானத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். இவர்களது இப்படியான தீர்மானங்களே இந்தப் பிரச்சினை இழுபடவும் அழுக்கு அரசியலாகவும் வழி செய்துள்ளன.

“முஸ்லிம்கள் இந்த தாக்குதலாளிகளின் அடக்கத்துக்கு மறுத்ததால் மற்றும் தாக்குதலாளி ஈவு இரக்கமற்ற விதத்தில் சிறு குழந்தைகளைக் கூட தமது தாக்குதலில் கொன்றதால்” என்று காரணம்கூறி, தமிழர் பகுதிகளிலும் இந்தத் தாக்குதலாளிகளின் சடலத்தை அடக்கம் செய்ய எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்திருக்கின்றன. இதுவும் ஏற்கப்படக் கூடியதல்ல.

இறுதி நிகழ்வுக்கான உரிமை என்பது ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமை. இதனை நீங்கள் மதிக்க வேண்டும்.

இந்த இரு சமூகங்களும் இன்னுமொரு விடயத்தையும் மறந்துவிட்டார்கள். ஒருவர் இறந்த பிறகு நடக்கும் இறுதி நிகழ்வுகள் அவர்களுக்கானது என்பது எந்த அளவுக்கு முக்கியமோ, அதனைவிட அவரது நெருங்கிய உறவுகளுக்கு மிகவும் முக்கியமானது. இந்த இறுதி நிகழ்வுகள் பெரும்பாலும் அவரது நெருங்கிய உறவுகளுக்கான ஒரு மன ஆற்றுப்படுத்தல் என்பதையும் நாம் மறந்துவிட்டோம். இறந்தவர் கொடூரமான கொலையாளியாக இருக்கலாம். ஈவு இரக்கமறவராக இருக்கலாம் ஆனால், அவருக்கு செய்யும் இறுதி நிகழ்வுகள் உயிரோடு இருக்கும் அவரது உறவுகளை ஆற்றுப்படுத்த பெரிதும் உதவும். ஆகவே அவர் நல்லவரோ கெட்டவரோ அவரது இழப்பால் நிச்சயமாக அவரது நெருங்கிய உறவுகள் பாதிக்கப்பட்டிருப்பார்கள். நிச்சயமாக இவர் உயிரோடு இருந்த போது செய்த காரியங்களில் அவர்களுக்கு உடன்பாடு இல்லாமல் இருந்திருக்கலாம் அல்லது அவர்களுக்கு அவை தெரியாமல்கூட இருந்திருக்கலாம். ஆகவே அந்த உறவினர்களுக்கு மன ஆறுதல் ஏற்படவாவது இறந்தவரின் இறுதி நிகழ்வுகள் நிகழ்ந்தாக வேண்டும். ஆகவே எவரும் அவற்றை நிராகரிக்கக்கூடாது.

உண்மையில், உங்கள் குழந்தைகளைக் கொன்ற கொலையாளியாக இருந்தாலும் அவரது இறுதி நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் அதுவே மனிதம் நிலைக்க வழி செய்யும். உங்கள் மதமோ கலாசாரமோ பண்பாடோ இதனை நிச்சயமாக நிராகரித்திருக்காது. அப்படி அவை இதனை நிராகரித்திருந்தால் அவை சரியானவை அல்ல அவற்றைத்தான் நீங்கள் நிராகரிக்க வேண்டும்.

இவற்றை அரசியல்வாதிகள் அரசியலாக்கவும் விட்டுவிடாதீர்கள். அது பிணத்தை புதைக்காமல் இருப்பதால் ஏற்படும் அசிங்கத்தை விட அசிங்கமானது. அதனைவிட இறந்தவரை புதைப்பது அல்லது எரித்துவிடுவதுதான் சுத்தம், சுகாதாரம். முடிந்தால் உங்கள் மத முறைப்படி இறுதி நிகழ்வைச் செய்துவிடுங்கள்.

இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளில் எந்தவிதமான ஏற்றத்தாழ்வுக்கும் இடமில்லை. வேறுபாட்டுக்கும் இடமில்லை. சாதி, மத, பொருளாதார, அரசியல், பண்பாட்டு, நல்லவன் மற்றும் கெட்டவன் என்ற எந்த வேறுபாடுகளும் இல்லாத சமரசமான இடங்கள் அவை.

அவற்றையும் அரசியலால் கெடுத்துவிடாதீர்கள்.

---

# அரக்கனை அழிக்க முடியுமா?

## பகிடி வதைகள், பாலியல் தொல்லைகள், இலங்கைப் பல்கலைக்கழகங்கள்

1961 ஆம் ஆண்டு, எனக்கு அப்போது வயது 18, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்க அனுமதிகிடைத்து. அங்கு படிக்கச் சென்றபோதுதான் ராகிங் என அழைக்கப்பட்ட பகிடிவதையை அறியும் சந்தர்ப்பம் கிடைத்தது.

கிராமப் புறத்திலிருந்து நவீன வசதிகள்கொண்ட இலங்கையின்பல பாகங்களிலுமிருந்து வந்த பல்லின ,மாணவர்களும் கல்வி பயிலும் பல்கலைக்கழகம்அது.

புதிய சூழல் புதிய வாழ்க்கை அதற்கு எம்மைத் தயார்ப்படுத்த இந்த ராகிங் எனும் பகிடிவதை அன்று உதவியது போலவே எனக்கு இன்று படுகிறது.

சிரேஸ்ட மாணவர்கள் கேட்ட சரமாரியான கேள்விக்கணைகளால் எம்மை பற்றி நாம் கொண்டிருக்கும் அகங்காரங்கள் போயின. எமக்கு எதுவுமே தெரியாது என்ற எண்ணம் உண்டாயிற்று. தன்னடக்கம் ஊட்டப்பட்டது அத்தோடு அனைவருடனும் கலந்து பழகும் சூழலையும் அது ஓரளவு தந்தது.

தூசணம் எனும் கெட்ட வார்த்தைகள் பேசாத, மற்றவரை டேய் என்று மரியாதைக் குறைவாகப் அழைக்கத் தெரியாத அற ஒழுக்கச் சூழலில் வளர்ந்த எம்மைப் போன்ற கிராமப்புற மாணவர்களுக்கு அங்கு ராகிங் காலத்தில் தூஸண வார்த்தைகளும் மரியாதைக் குறைவான வார்த்தைகளும் சொல்ல நிர்ப்பந்திக்கப்பட்டமை ஒன்றே எனக்கு ஏற்பட்ட பெரும் அதிர்ச்சி அனுபவமாகும்.

மற்றப்படி சீனியர் மாணவர்களைக் கண்டவுடன் புத்தகங்களை கீழே போட்டுவிட்டு அவர்களுக்கு சல்யூட் அடித்தல், நீளக்காற்சட்டையின் ஒருபகுதியை மடித்துவிட்டு பைத்தியக்காரர்கள் போலச் செல்லல், புத்தகங்களைத் தலையில் வைத்துக்கொண்டு நிமிர்ந்து நடத்தல், முழங்காலில் நடத்தல், தண்ணீர் நிரம்பிய பொண்டுக்குள் எம்மை நனைத்தெடுத்தல் என்பனவே எமக்குத் தரப்பட்ட அதிஉச்ச வதைகளாகும். எங்களுக்கு ஆரம்பத்தில் இவை பயமும்அருவருப்பும் தந்தாலும் காலப்போக்கில் அவை பழகிப்போய் பகிடியுமாகிவிட்டன.

இரு வாரங்களுக்குள் இவை யாவும் முடிந்து முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு இரண்டாம் ஆண்டு மாணவர்கள் வைக்கும் விருந்துடன் இந்த ராக்கிங் சேட்டைகள் முடிந்து படிப்புகள் தீவிரமாக ஆரம்பமாகிவிடும்.

பின்னர் கடுமையாக ராகிங் செய்த சிரேஸ்ட மாணவர்களை மச்சான் என அழைப்பதும் அவர்கள் நெருக்கமான நண்பர்கள் ஆகிவிடுவதும் நிகழும்.

இத்தகைய இன்பமான பகிடி வதைகள் எல்லை மீறிவிடும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலும் அவை பெரும்பான்மை இல்லை புறநடைகளே.

எங்கள் காலத்தில் பகிடிவதை உடல் வதையாக சிறைச்சாலை வதையாக இருந்ததில்லை.

அவற்றிற்கு பயந்து மாணவர்கள்




படிப்பைக் கைவிட்டதோ அவை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டதோ அப்போது இல்லை.

இப்போது ஆண்டு 2019 நடக்கிறது. இன்றோ இலங்கைப் பல்கலைக் கழகங்களின் நிலைமைகள் தலைகீழாக மாறிவிட்டன

பகிடிவதை பயங்கர அரக்கனாக மாறி பல்கலைக்கழக வாயிலில் கையில் கொலை ஆயுதமான ஓர் பெருஅரிவாளோடு தனது கொடுவாய்ப் பற்கள் வெளியே தெரிய பயங்கரமாகச் சிரித்தபடி பல்கலைக்கழகம் புக வரும் புதுமாணவர்களைத் தாக்கக் காத்திருக்கிறது.

பேயைக் கண்டதுபோல ராகிங்கைக் கண்டு மாணவர்கள் பயந்து நடுநடுங்குகிறார்கள், பலகலைக்கழகம் செல்லப் பயப்படுகிறார்கள். ராகிங் எனப்படும் இப் பகிடி வதை குரூரமான மனிதாபிமானமற்ற பகிடிவதையாக மாறியுள்ளது. தமது மனப்பிறழ்வுகள் அனைத்தையும் விரல்விட்டு எண்ணக்கூடிய சில சிரேட்ட மாணவர்கள் வரும்புதிய மாணவர்கள்மீது கொட்டித் தீர்த்து ஓர்சுய குரூர இன்பம் அடைகிறார்கள். இதுஓர் மனநோயின் அறிகுறியே.

பகிடி வதை காரணமாக சில மாணவர்கள் இடைநடுவில் படிப்பைக் கைவிடுகின்றனர் இதுவரை ஆயிரக்கணகான மாணவர்கள் இப்படி இடை நடுவில் படிப்பைக் கைவிட்டுள்ளனர், இவர்களுள்

தொடர்ச்சி... (பக்கம் -)

# சொல்லத் துணிந்தேன்! 13



21.04.2019 அன்று இலங்கையில் இடம்பெற்ற ஐ. எஸ் அமைப்பினர் உரிமைகோரிய தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களும் அதன் பக்க மற்றும் பின்விளைவுகளும் தென்னிலங்கை அரசியலிலும் - இந்து சமுத்திரப் பிராந்திய அரசியலிலும் - பூகோள அரசியலிலும் இதுவரை ஏற்படுத்தியிருக்கின்ற இனிமேல் ஏற்படுத்தப்போகின்ற மாற்றங்களைத் தமிழர் தரப்பு கவனத்தில் எடுக்க வேண்டும். 2001 செப்டம்பர் 11 ந் திகதி நடைபெற்ற அமெரிக்க இரட்டைக் கோபுரத்தாக்குதல் பூகோள அரசியலில் ஏற்படுத்திய மாற்றங்களைக் கவனத்திலெடுக்காமல் 'மகாதேவி' திரைப்படத்தில் வில்லன் நடிகர் பி. எஸ். வீரப்பா 'அடைந்தால் மகாதேவி அடையாவிட்டால் மரணதேவி' என்று வீரவசனம் பேசியதுபோல விவேகமற்ற வீரத்தைக் காட்டப்போய் குண்டுச் சட்டிக்குள்ளேயே குதிரையோடிய அரசியலால் இலங்கையின் வடகிழக்குத் தமிழர்கள் அடைந்த பேரிழப்புக்கள் நம்முன்னால் உள்ள மிக அண்மைக்கால அனுபவங்களாகும்.

அரசியல் ஒரு சமூக விஞ்ஞானம். அதில் விஞ்ஞானபூர்வமான அணுகுமுறைகளும் பகுப்பாய்வுகளும் தேவை. ஆனால் தமிழர் தரப்பில் அரசியலைக் கையாளுகின்ற தமிழர்தம் சமகால அரசியல் தலைமையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அறிவுபூர்வமான அரசியல் சிந்தனைகள் இருப்பதாகத் தெரியவில்லை. தென்னிலங்கை அரசியலில் - இந்து சமுத்திரப் பிராந்திய அரசியலில் - பூகோள அரசியலில் ஏற்படும் மாற்றங்களைக் கவனத்திற் கொள்ளாமல் அந்த மாற்றங்களுக்கூடாகத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் நலன்களை எவ்வாறு வென்றெடுக்கலாம் என்ற உபாயங்கள் எதுவுமில்லாமல் அரைத்த மாவையே அரைத்துக்கொண்டு கடந்த எழுபது வருடகாலமாகப் பாடுகின்ற அதே பல்லவியைப் பாடிக்கொண்டு எதிர்வரும் தேர்தல்களில் எவ்வாறு தமிழ்மக்களை வழமைபோல் ஏமாற்றி வாக்குகளை வேட்டையாடித் தங்கள் பதவி நாற்காலிகளைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்பதிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (தமிழரசுக் கட்சியின்) முன்னாள் மற்றும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களும் தங்கள் கவனத்தைக் குவித்துச் செயற்படுகிறார்களே தவிர மக்கள் நலன்



சார்ந்த சமூகமாற்ற அரசியலிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் உட்பட அனைவருமே வெகுதூரம் அந்நியப்பட்டே உள்ளார்கள். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை நிலைமை இன்னும் மோசமாகவுள்ளது. வடமாகாணத்திற் குரிய அரசியல் சமன்பாடு கிழக்கு மாகாணத்திற்குப் பொருந்தமாட்டாது. கிழக்குமாகாணத் தமிழர்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் காப்பாற்றவும்மாட்டாது. கிழக்கு மாகாணத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் நலன்களை வென்று தருகின்ற அரசியல் வினைத்திறனோ வல்லமையோ விருப்பமோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அறவே இல்லை.

எனவே இனிமேலும் கிழக்கு மாகாணத் தமிழர்கள் தேர்தல்களில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிப்பது தங்கள் தலையிலே தாங்களே மண்ணை அள்ளிப்போடுகின்ற மடத்தனத்திற்குச் சமமாகும். நடந்தவைகள் நடந்தவைகளாகவே இருந்து தொலையட்டும். நடக்கப் போகின்றவையாவது நல்லவைகளாக இருக்க வேண்டும். இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களைக் கிழக்கு மாகாணத் தமிழர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

கொள்ள வேண்டுமென்றால் எதிர்வரும் தேர்தல்களில் கிழக்கைத் தளமாகக் கொண்டு மேற்கிளம்புகின்ற ஓர் அரசியல்கட்சிக்கு அல்லது கட்சிகள் இணைந்த 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' போன்ற ஓர் அரசியல் கூட்டணிக்குத்தான் தங்கள் ஒட்டுமொத்த வாக்குகளையும் அளிக்க வேண்டும். இதனைவிடுத்து வேறுவிதமாகச் சிந்தித்தால் 'பழையகுருடி கதவைத்திறடி' எனும் கதையாகத்தான் நிலைமைகள் மாற்றமின்றித் தொடரும். கிழக்கு மாகாணத் தமிழர்களின் அரசியலும் (தமிழரசுக் கட்சி) குட்டக்குட்டக் குனிபவனும் மடையன்; (கிழக்கு மாகாணத் தமிழர்கள்) குனியக் குனியக் குட்டுபவனும் மடையன் என்பதாகத் தொடர்ந்தும் இருக்கும். இந்த நிலைமை கிழக்குத் தமிழர்களை இன்னும் படுகுழியில் தள்ளும். கிழக்குத் தமிழர்கள் இதையிட்டு மிகத் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

# வரலாற்றை மூடி மறைத்தலும் இட்டுக் கட்டலும்

உயர் கல்வி நிறுவகத்தில் வருகை தரு கலைஞர்களாக அண்ணாவிமார்: சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவக முன்னாள் பணிப்பாளரின் முக்கியமான பங்களிப்பு. எனும் தலைப்பில் திரு. து.கௌரீஸ்வரன் அவர்களின் கட்டுரை 28.06.2019 அன்றைய அரங்கம் இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

சமூகத்தில் சமூக அக்கறையுடன் நற்காரியங்களைச் செய்பவர்களை பாராட்டுவது அந்தச் சமூகத்தின் நன்றியுணர்வையும் உயரிய பண்பாட்டையும் வெளிக்காட்டுவதாகும். ஆனால் உண்மையான வரலாற்றை மறைத்தும் திரிபுபடுத்தியும் தமக்கான வரலாறொன்றை கட்டமைக்க முயல்வது நேர்மையான அறிவுச் செயற்பாடல்ல.

'நிறுவகத்தின் பணிப்பாளராக கடந்த மூன்று வருடங்களும் பதில் பணிப்பாளராக சுமார் ஆறு மாதங்களும் கடமையாற்றிய கலாநிதி.சி.ஜெய்சங்கர் அவர்கள் குறித்த நிறுவகத்திற்குப் புதிதாக பதில் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் காரணமாக கடந்த 07.06.2019 ஆந் திகதி தனது பதில் பணிப்பாளர் கடமையை ஒப்படைத்து விட்டு தனது சேவையிடமான நுண்கலைத்துறைக்குத் திரும்பியுள்ளார்.' என மிகவும் புத்திசாலித்தனமாக வரலாற்றுச் சம்பவங்களை மூடிமறைத்துள்ளார். கட்டுரையாளரை நேர்மையான புலமையாளன் என நம்பிக் கொண்டிருக்கும் மக்களையும் நிர்வாகப் பொறிமுறை, சமூக நடப்புக்கள் தெரியாத மக்களையும் இவ்வாறான தனது புத்திசாலித்தனமான எழுத்துக்கள் மூலம் ஏமாற்றுவது எவ்வளவு நம்பிக்கைத் துரோகம் என்பதனை கட்டுரையாளர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

கலாநிதி.சி.ஜெய்சங்கர் அவர்கள் தனது மூன்றுவருட பதவிக்காலம் முடிவடைந்தவுடன் தனது பணிக்குத் திரும்பியிருந்தாலோ அல்லது நேர்மையான வழியில் பதில் கடமைக்கு நியமிக்கப்பட்டிருந்து கட்டுரையில் குறிப்பிடுவதைப்போல் இடம்பெற்றிருக்குமாயின் எமக்கு அது பிரச்சினை இல்லை. ஆனால் கலாநிதி.சி.ஜெய்சங்கர் நேர்மையற்ற



வழியில் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதாகக் கூறி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் பொதுமக்கள் ஒரு ஆர்ப்பாட்டத்தினைச் செய்திருந்தது பற்றி ஊடகங்கள் வெளிப்படுத்தியிருந்தன. அத்துடன் நிர்வாகப் பொறிமுறையில் பதில்கடமைக்கு நியமிக்கப்படுபவர் குறிப்பிட்ட பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டதன் பின்னர்தான் பதில் கடமையில் இருந்து விடுவிக்கப்படுவாரே தவிர மற்றுமொரு பதிற்கடமை உத்தியோகத்தரை நியமித்து ஏற்கனவே பதிற் கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரை நீக்குவதல்ல. அவ்வாறு நீக்கப்படுகின்றார் எனில் அவர் வகித்த பதவிக்கு மேலான பொறுப்பு வாய்ந்த வேறோர் பதவி அவருக்கு வழங்கப்படுவதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படாமல் அவர் நீக்கப்படுகின்றார் என்றால் குறிப்பிட்ட பதிற்கடமை ஆற்றிய உத்தியோகத்தர் சரியான முறையில் செயற்படவில்லை என்று அர்த்தமாகும். எனவே கட்டுரையாளர் பொதுமக்களின் ஆர்ப்பாட்டத்தினையும் நிர்வாக இயங்குமுறையையும் மூடிமறைத்து தவறான ஒன்றை வாசகர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு சம்பவங்களை மூடிமறைப்பது கட்டுரையாளர் தாம் பெற்றுக்கொண்ட கல்விக்கும் வகிக்கின்ற பதவிக்கும் பொருத்தமானது அல்ல.

இதுபோன்றே புலமையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றுமொரு வரலாற்றை மறைத்து எழுதுகின்றார். அதாவது 'இலங்கைத் தமிழர் பாரம்பரிய அரங்க அறிவியல் வரலாற்றில் பேராசிரியர்.சுவாமி.விபுலாநந்தர், பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர்.சு.வித்தியானந்தன், ஆகியோர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த செயற்பாடுகளில் ஒரு முக்கியமான மைல் கல்லாக கலாநிதி.சி. ஜெய்சங்கர் அவர்களின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ...........வருகை தரு கலைஞர் எனும் உத்தியோகபூர்வ நியமனம் அமைந்துள்ளது எனலாம்.' எனக் குறிப்பிடுகின்றார். இது எவ்வளவு அப்பட்டமான மூடிமறைத்தலும் பக்கச்சார்பும் என்பதை அரங்க வரலாறு கற்கும் ஒரு க.பொ.த.உயர்தர மாணவன் கூட அறிவான்.

சுவாமி.விபுலாநந்தர் சேக்ஸ்பியருடைய அரங்கு பற்றியே எழுதியுள்ளார். இலங்கை தமிழர் பாரம்பரிய அரங்க வரலாறு தொடர்பாக எதுவும் குறிப்பிடவில்லை. அது போல் பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாண பேச்சுத் தமிழை நவீன நாடகத்துக்குப் பயன்படுத்தி வளர்த்த ஒருவராகவே அறியப்படுகிறாரே தவிர இலங்கை தமிழர் பாரம்பரிய அரங்குக்காக அல்ல. பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள்தான் இலங்கை தமிழர் பாரம்பரிய அரங்கை மத்தியதர வர்க்க பார்வையாளர்களுக்கு ஏற்றவண்ணம் வடிவமைத்து தமிழர்களுக்கும் ஒரு அரங்கப் பாரம்பரியம் உண்டு என்பதை வெளிக்காட்ட முனைந்தவர். ஆனால் காலனித்துவம் பற்றி காரசாரமாக விமர்சிப்பவர்கள் பேராசிரியர். சு.வித்தியானந்தன் கூத்தைக் கெடுத்துவிட்டார், அவரால்தான் கூத்து சீரழிந்தது. இவர்கள் எல்லாம் காலனித்துவ அடிவருடிகள் என விமர்சிக்கின்றனர். காலனித்தவம் தொடர்பாக காரசாரமான விமர்சனத்தைக் கொண்டிருக்கும் கட்டுரையாளர் பேராசிரியர். சுவித்தியானந்தன் அவர்களை இலங்கை தமிழர் பாரம்பரிய அரங்க அறிவியல் வரலாற்றை முன்னெடுத்தவராக ஏற்றுக் கொள்வது கட்டுரையாளரின் தத்துவார்த்த தெளிவின்மையையும் சந்தர்ப்பவாதத்தினையும் வெளிப்படுத்துகின்றது.

**விதுரன்**

கலாநிதி.சி.ஜெய்சங்கரை முன்நிறுத்துவதற்காக சுவாமி. விபுலாநந்தர், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகிய இரு பெரும் வெவ்வேறுபட்ட ஆளுமைகளை அவர்கள் சாராத பாரம்பரிய தமிழர் அரங்க அறிவுப்புலத்தை அவர்களுக்குரியதாக்கி அவர்களுடைய அறிவுப் புலமையை கொச்சைப்படுத்துகின்றார். இது போன்று 'இலங்கைத் தமிழர் பாரம்பரிய அரங்க அறிவியல் வரலாற்றில்' பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களுடன் இணைந்து பணியாற்றி தமிழர்களின் பாரம்பரிய அரங்கை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியவர்களான பேராசிரியர். கா.சிவத்தம்பி, பேராசிரியர்.சி.மௌனகுரு, கலாநிதி.காரை.சுந்தரம்பிள்ளை போன்றவர்களுடைய பணியினை மூடி மறைக்கின்றார். 'பண்டைத் தமிழர் சமூகத்தில் நாடகம்', மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், 'வட இலங்கை நாட்டார் அரங்கு' எனும் காலத்தால் அழியாத ஆய்வுநூல்களைத் தந்தவர்கள்

தொடர்ச்சி... (பக்கம் -15)

# கல்முனை அரசியலில் பிக்குகள்



கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்த்தல் கோரிக்கையினை முன்வைத்து கல்முனை சுபத்ரா ராமய விகாரதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர் அவர்கள் உண்ணாவிரதிகளில் ஒருவராகக் கலந்துகொண்டதைத் தொடர்ந்து புத்தபிக்குகளிகளினதும் அரசினதும் கவனம் கல்முனை விடயத்தில் குவிந்திருந்தது. இதனைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக அமைச்சர் தயா கமகே, அமைச்சர் மனோ. கணேசன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பேரோராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி பிரச்சினையைத் தீர்த்துவைக்க கல்முனைக்கு வந்திருந்தனர். அரசாங்கப் பிரதிநிதிகளை நம்பாத போராட்டக்காரர்கள் மேற்படி பிரதிநிதிகளை உண்ணாவிரதக் களத்திலிருந்து வெளியேற்றினர். அதனைத் தொடாந்து கல்முனைக்கு வருகை தந்த பொதுபலசேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வழங்கிய உறுதி மொழியில் நம்பிக்கை கொண்டு உண்ணாவிரதம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதை அனைவரும் அறிந்திருப்பர்.

கல்முனை விடயத்தில் பௌத்தபிக்கு ஒருவர் தமிழ் மக்களின் நியாயத்தினை உணர்ந்து உண்ணாவிரதப் போராட்டக்காரராக இருந்தமையும் ஞானசார தேரரின் உறுதிமொழியும் சில தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தமிழ் முஸ்லிம்களின் உறவை பிரித்தாளும் நடவடிக்கையாக விமர்சிப்பதனை ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

தற்போது இவர்கள் தமிழ், முஸ்லிம் உறவு தொடர்பாக மிக அக்கறையுடன் பேசத் தொடங்கியுள்ளனர். கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரச்சினையை முஸ்லிம் காங்கிரசும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பேசித் தீர்த்துக்கொள்ளமுடியும் என்றும் கூறுகின்றனர். முப்பது வருடகாலமாக பேசித்தீர்க்க முடியாமல் வேண்டுமென்று இழுத்தடித்தவர்கள் பேசித்தீர்க்க முன்வருவது ஒருவகையான ஏமாற்று அரசியல் என்பது போராட்டக்காரர்களின் புரிதலாகும். அதனால்தான் அரசியல்வாதிகளின் தலையீட்டினை அவர்கள் விரும்பவில்லை. கல்முனை தமிழ் சிவில் சமூக பிரதிநிதிகளின் தீர்வுத் திட்ட முன்மொழிவிலும் எந்தவொரு அரசியல்வாதிகளின் தலையீடுமின்றி இப்பிரச்சினை அணுகப்பட வேண்டும் என்று கோரியிருப்பதாக அறியமுடிகின்றது.

இப்பத்தியில் இப்பிரச்சினையை அரசியலைக் கடந்து சமூகமட்டத் தலைவர்கள் தங்களுக்கும் கலந்துபேசித் தீர்த்துக் கொள்வது நிலையான சமூகநல்லிணக்கத்துக்கும் மகிழ்ச்சியான வாழ்வுக்கும் முக்கியமானது என்பதையும் அவ்வாறான முயற்சி இலங்கை அரசியலுக்கே ஒரு முன்னுதாரணம் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன். ஆனால் சமூகமட்டத்தலைவர்கள் எனப்படுபவர்களும் இனமையவாத சிந்தனைக்குள் நின்றே விடயங்களை நோக்குவதால் திறந்த மனதுடன் உண்மையைப் பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளாமல் யாரை யார் ஆள்வது என்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர். இந்த ஆள்தல் மனோநிலை இருக்கும்வரை எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் தீர்வு என்பது கடினமான பணியாகத்தான் இருக்க முடியும்.

1948ம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது அது தோட்டத்தொழிலாளர்களுக்கு பாதகமாக அமைவதனைச் சுட்டிக்காட்டி இடதுசாரிகளும் தமிழ் அரசுக்கட்சியும், சில சுயேச்சை சிங்களப் பிரதிநிதிகளும் எதிர்த்து வாக்களித்த போதும் முஸ்லிம் சிறுபான்மையினர் எவரும் இதனை எதிர்த்து வாக்களிக்கவில்லை என்பது கவனிக்கத் தக்க ஒரு விடயமாகும். அப்போதிருந்து தமக்குக் கிடைக்கும் அரசியல் இலாபங்களை தமது இனத்துக்காக எவ்வாறு பயன்படுத்துவது என்பதே முஸ்லிம் அரசியல் தலைவர்களுடைய நடவடிக்கையாக இருந்திருக்கின்றதே தவிர மனிதாபிமானம், ஜனநாயகம், சிறுபான்மையினர் உரிமை, சிறுபான்மையினர் ஒற்றுமை என்ற பேச்சுக்களெல்லாம் தமது இலாபங்களை ஈட்டிக்கொள்வதற்காகவே அன்றி உண்மையான இதய சுத்தியுடனான செயற்பாடுகளுக்கல்ல.

1952ம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தோட்டத்தொழிலாளர்கள் பெரும்பான்மையோர் நீக்கப்பட்டு 1950ம் ஆண்டு தேர்தல் பதிவேட்டின் பிரகாரம் தேர்தல் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டபோது இலங்கை இந்திய காங்கிரஸ், இலங்கைப் பிரஜா உரிமை கோரி விண்ணப்பித்தவர்களுக்கு வாக்குரிமை வழங்குமாறு வேண்டி சத்தியாக்கிரகப் போராட்டத்தினை நடாத்திய போது பல்வேறுமட்ட ஜனநாயக வாதிகள் ஒன்று கூடி தோட்டத்தொழிலாளர்களுக்க நீதி வேண்டி உரையாற்றினர். 'கம்பளையைச் சேர்ந்த பிரபுத்த பிக்கு மண்டலய என்ற அமைப்பைச் சேர்ந்த 29 பௌத்த பிக்குகள் சார்பாக கே.இந்தசார தேரர், பிரதம மந்திரிக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். 'அறிவு மிக்க அரசியல்வாதி என்ற வகையிலும், பௌத்தர் என்ற முறையிலும் நெருக்கடி மிகுந்த இக்கட்டத்தில் இலங்கையின் தலைவிதியை வழிநடத்துவதில் சட்டரீதியான முறையில் அல்லாது பிரச்சினையை மனிதாபிமான முறையில் தாங்கள் அணுகவேண்டும் என்பது எங்கள் விருப்பமாகும்.........' என இனம், மதம், அரசியல் என்பனவற்றைக் கடந்து குரல் கொடுத்தார். இது அவருடைய மனிதாபிமானத்தையும் அந்த மதம் போதிக்கும் அன்பையும் சமத்துவத்தினையும் அவர் தன் வாழ்நாளில் கடைப்பிடித்ததையும் காட்டுகின்றது.

கல்முனை சுபத்ரா ராமய விகாரதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர் கூட முஸ்லிம் மக்களுக்கு அநியாயம் நடந்தபோது அதற்கெதிராக குரல்கொடுத்த போது என்னைப் பாராட்டியவர்கள் தமிழ் மக்களுக்கு நடக்கும் அநியாயத்துக்கு எதிராக குரல்கொடுத்துச் செயற்படும் போது என்னை இனவாதி என்கிறார்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

எனவே தேரர்கள் அனைவரும் பேரினவாத சிங்கள பௌத்தத்தின் அடையாளம் என்ற முற்கற்பிதத்தை முஸ்லிம், தமிழ் அரசியல் தலைவர்கள் கைவிட வேண்டும். 'பிரபாகரனின் ஆதிக்கத்தின் போது தேரர்களின் உதவியை நாடி நாங்கள் தமிழ் மக்களை பழிவாங்கவில்லை' எனக் கூறும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அவர்கள் தேரர்கள் அனைவரையும் மோசமான இன, மத வாதிகளாக நோக்குவதை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறு இன,மத வாதத்திற்கு எதிராகப் பேசுபவர், அட்டப்பள்ளம், காரைதீவு, வீரமுனை போன்ற தமிழ் கிராமங்களின் மீது முஸ்லிம் ஆயுதக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை எந்த அடிப்படையில் எடுத்துக் கொள்கிறார் என்பது விளங்கவில்லை. அத்துடன் அங்கு படுகொலைசெய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கான நீதியினை ஹரீசும் ஹரீசைப்போன்ற முஸ்லிம் தலைவர்களும் இதுவரைப் பெற்றுக்கொடுக்காது, மாறிமாறிவரும் அரசாங்கத்தின் செல்லப்பிள்ளைகளாகவும் அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்திகளாகவும் இருந்து, தமிழ்மக்களை பக்கச்சார்பாக நடாத்திக் கொண்டு, நியாயமான கோரிக்கையினையே அநியாயமான கோரிக்கை என முழுக்க முழுக்க முஸ்லிம் நலன் அரசியலில் நின்று, மேற்படி கூற்றைக் கூறுவதற்கான தார்மீக அந்தஸ்து ஹரீஸ் அவர்களுக்கு இல்லை.

ஒவ்வொருத்தரும் முதலில் தங்களுக்கு நேர்மையானவர்களாகவும் உண்மையானவர்களாகவும் இருக்கின்ற போது மக்கள் இனம், மதம், மொழி, தேசம் கடந்து அவர்களைத் தலைவர்களாக ஏற்றுக்கொள்கிறார்கள் அவர்கள் காட்டிய பாதையில் பயணம் செய்கிறார்கள் என்பதை உலக அரசியல் தலைவர்களுடைய வரலாறுகள் காட்டிநிற்கின்றன. எனவே ஹரீஸ் அவர்கள் தனது கூற்றுக்கு நேர்மையானவராக இருத்தல் வேண்டும். அந்த நேர்மையை தமிழ் மக்கள் மனதார உணரவேண்டும். அந்த உணர்வை தமிழ் மக்கள் வெளிப்படுத்த வேண்டுமே ஒழிய ஹரீஸ் அவர்களோ எந்த முஸ்லிம் தலைவர்களோ வெளிப்படுத்தக் கூடாது. அதுதான் உண்மையான அரசியல் தலைமைத்துவத்தின் பண்பாக இருக்க முடியும்.

முஸ்லிம் தலைவர்களும் மதப்பெரியோர்களும் உணர்ச்சிமயமான அரசிலை விடுத்து யதார்த்த அரசியலையும் வரலாற்று நிலைமைகளையும் ஒளிவு மறைவின்றி உரையாடுவதற்கு முன்வரவேண்டும். சென்ற 'அரங்கம்' இதழில் முஸ்லிம் தலைவர்களின் திட்டமிட்ட நடவடிக்கைகளினால் கல்முனையில் தமிழர்கள் எவ்வாறு

**எழுவான் வேலன்**

சிறுபான்மையாக்கப்பட்டார்கள் என்பதனை ஆதாரபூர்வமாக சுட்டிக்காட்டப்பட்டது. அதில் சுட்டிக்காட்டிய விடயங்களை சரியான ஆவணங்கள் மூலம் மறுத்து கல்முனையை முஸ்லிம்களின் தாயகப் பிரதேசம், முஸ்லிம்களின் வர்த்தக நகர், முஸ்லிம்களின் முகவெற்றிலை என்று நிறுவுதல் வேண்டும். அவ்வாறு நிறுவுகின்ற போது முஸ்லிம் மக்களுடைய நியாயப்பாடுகளைப் புரிந்து கொண்டு தமிழ் மக்களிடம் உள்ள சனநாயகவாதிகளும் மனித உரிமைவாதிகளும் அந்த நியாயப்பாட்டிற்காக முஸ்லிம்களுடன் இணைந்து குரல்கொடுக்கத் தயங்கப் போவதில்லை.

அதை விடுத்து தமிழர்களின் போராட்டத்தினை நீதியற்ற போராட்டமாகச் சித்தரிப்பதும், கல்முனை முஸ்லிம்களின் தாயகப் பிரதேசம் அதை விட்டுக்கொடுக்க முடியாது என்று இலங்கை முழுவதிலுமுள்ள முஸ்லிம்களிடம் ஒரு கொதிநிலை உணர்ச்சியை ஏற்படுத்தி முஸ்லிம் மக்களை உணர்ச்சி பூர்வமான அரசியலுக்குள் இழுத்துக் கொண்டு செல்வதில்தான் தொடர்ந்தும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் மதப்பெரியோர்களும் முனைப்புக் காட்டி வருகிறார்கள். இது அறிவுபூர்வமான செயற்பாடல்ல. இந்தச் செயற்பாடுகளினால் அன்றாடம் உழைத்து வாழும் சாதாரண மூவின மக்களே பெரிதும் பாதிக்கப்படுவர் என்ற உண்மையை மூவின மக்களும் உணர்ந்து கொண்டு செயற்படுதல் மகிழ்ச்சிகரமான எமது வாழ்வுக்கு முக்கியமானதாகும்.

அரங்கம் பத்திரிகையில் விளம்பரம் செய்ய சிறப்புத் தள்ளுபடி!
கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் - ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் - ரூபா 200 மாத்திரமே

# தமிழரசு கட்சியின் 16 வது தேசிய மாநாடு சொல்வதும் சொல்லாததும்

தமிழரசு கட்சியின் 16 வது தேசிய மாநாடு (30/06/2019 )அன்று யாழ்-வீரசிங்கம் மண்டபத்தில் நடந்து முடிந்துள்ளது. வழமைபோலவே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சுமார் எழுபது ஆண்டுகால வரலாற்றைக்கொண்ட தமிழரசுக்கட்சியானது 1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி யாழ்-மாவட்டபுரத்தில் உதயமானது. மலேசியாவில் பிறந்து வளர்ந்த யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் இக்கட்சியின் ஸ்தாபகராவார். அதுவரைகாலமும் ஜீஜீ. பொன்னம்பலம் தலைமையில் இயங்கிய தமிழ் காங்கிரஸ் என்கின்ற கட்சியில் இருந்து விலகியே இவர் தமிழரசு கட்சியை உருவாக்கினார்.

உண்மையில் இக்கட்சியானது பெடரல் பார்ட்டி ( federal party) அதாவது சமஸ்டி கட்சி என்றுதான் பதிவு செய்யப்பட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதனை 'தமிழரசுக்கட்சி என செல்வநாயகம் அறிமுகம் செய்தார். அதன் அடிப்படையில் தொடக்க காலங்களில் இக்கட்சியானது சமஸ்டி கோரிக்கையையே முன்னெடுத்தது. எனினும் இக்கட்சியின் தலைமையில் தமிழர் விடுதலை கூட்டணி உருவானபோது அது தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்தது. 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் "தமிழீழமே தீர்வு" என்றும் அதற்காக ஆயுதமேந்தி போராடுமாறும் பகிரங்க அழைப்பை தமிழ் மக்களை நோக்கி விடுத்தது இக்கட்சி.

இந்த வரலாறுகளின் தொடர்ச்சியில்தான் இன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பை தலைமையேற்று நடத்திவருகின்ற தமிழரசு கட்சி தனது 16 வது தேசிய மாநாட்டை நடத்தியிருக்கின்றது. இம்மாநாட்டில் 27 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த தீர்மானங்களைக் கூர்ந்து அவதானிக்கின்ற போது இப்போதுதான் யுத்தம் முடிந்ததா? என்கின்ற கேள்வி எழும்புவதை தவிர்க்க முடியவில்லை. ஏனெனில் 2014ஆம் ஆண்டு நடந்த தமிழரசு கட்சியின் 15வது மாநாட்டில் நிறைவேற்றிய 15 தீர்மானங்களுக்கும் இவற்றுக்கும் பெரிய வேறுபாடுகளை காணமுடியவில்லை. அதே வரிகளை தூசு தட்டியெடுத்து முன்னும் பின்னும் சற்று மாற்றியமைத்து விரிவு படுத்தி 27 தீர்மானங்களாக வரிசைப்படுத்தியுள்ளனர்.

இத்தீர்மானங்களில் அரசியல்தீர்வு, மீள்குடியேற்றம், கைதிகள் விடுதலை, காணி அபகரிப்புகள், இராணுவ பிரசன்னம், காணாமல் போனோர் என்பன சார்ந்த அரசியல் கோரிக்கைகளும் பெண் தலைமைக்குடும்பங்கள், கல்வி, வேலைவாய்ப்பு, மீன்பிடி, தொழிற்துறைகள், நிதியொதுக்கீடுகள் என்றவாறான அபிவிருத்தி சார்ந்த கோரிக்கைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் நடைபெற்ற 15 ஆவது மாநாட்டில் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்மானத்தில் குறித்த சில வாரங்களுக்குள் அரசாங்கம் அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் நில ஆக்கிரமிப்பு, கைதிகள் மற்றும் காணாமல்போனோர் விடயத்தில் மூன்று மாதங்களுக்குள் முடிவு காணப்படாமல் விட்டால் ஜனவரி மாதத்தில் இருந்து பரந்து பட்ட இடங்களிலும் சாத்வீகப்போராட்டம் வெடிக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த எச்சரிக்கைகள் எல்லாம் இல்லாது இம்முறை தீர்மானங்கள் வெளிவந்திருக்கின்றன. 15 ஆவது தேசிய மாநாட்டில் எடுக்கப்பட்டிருந்த கடும்போக்கு நிலைப்பாடும் தற்போதைய 16 வது தேசியமாநாட்டில் எடுக்கப்பட்டுள்ள மென்போக்கு நிலைப்பாடும் ஐக்கிய தேசிய கட்சி அரசு மீது கொண்டுள்ள வர்க்கசார்பு உறவு நிலையை சுட்டிநிற்கின்றது.

ஆனாலும் உத்தியோக பூர்வ தீர்மானங்களில் அனுங்கல் கோரிக்கைகளை வெளியிட்டுக்கொண்டு சம்பந்தர் பேராளர்களை திருப்திப்படுத்த ஒலிவாங்கியில் வேறு மாதிரி விளாசித்தள்ளியுள்ளார். சிங்கள அரசுகளின் ஏமாற்று வேலைகளால்தான் புலிகள் ஆயுதமேந்த வேண்டி வந்தது. இந்நிலை தொடர்ந்தால் மீண்டும் போராட்டம் வெடிக்கும் என்றெல்லாம் பொரிந்து தள்ளியுள்ளார். எப்படி பார்த்தாலும் வழமையாக மாவையார் பேசும் கதை வசனங்களை இம்முறை சம்பந்தர் பேசியுள்ளார் அவ்வளவுதான்.

அதுமட்டுமன்றி அரசியல் தீர்வு விடயத்தில் இன்றுவரை தமிழரசு கட்சிக்கு தீர்க்கமான கொள்கை எதுவும் கிடையாது என்பதை தீர்மான வரிகள் புடம்போட்டுக் காட்டியிருக்கின்றன.

அதாவது " அரசியல் தீர்வானது ஒருமித்த இலங்கை நாட்டில் தமிழ் மக்களின் இறையாண்மை, சுயநிர்ணய உரிமை, மனிதஉரிமை அடிப்படையில் சமஸ்டிக் கட்டமைப்பில் பிராந்தியங்களினதும் தேசியக் இனங்களினதும் தன்னாட்சி உரிமத்தை உறுதிப்படுத்த வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்துகின்றது."என குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே 'ஒருமித்த

**அறுமக்குட்டிபோடி**

இலங்கைக்குள்' என்கின்றபோது அது சமஸ்டிகளின் கூட்டை நிராகரிப்பதாகும். அதேவேளை சமஸ்டி என்கின்றபோது அது ஒருமித்த இலங்கை என்கின்ற ஒற்றையாட்சியை நிராகரிப்பதாகும். ஆனால் இங்கே இந்த தீர்மானம் ஆனது ஒருமித்த இலங்கை நாடு என்கின்ற ரணிலுடைய ஏக்க ராஜ்ய கொள்கையை ஏற்றுக்கொள்வதுடன் தமிழ் மக்களை ஏமாற்றும் முனைப்பில் சமஸ்டி கட்டமைப்பு, சுயநிர்ணய உரிமை என்கின்ற புலம்பல்களால் நிரம்பி வழிகின்றன. இவை அப்பழுக்கற்ற அரசியல் வறட்டுத்தன்மையின் வெளிப்பாடுகள் ஆகும். மேலும் அபிவிருத்திசார் தீர்மானங்கள் தமிழரசு கட்சியின் கொள்கைக்கு எதிரானவையாகும். ஏனெனில் கடந்த வாரம்கூட திருகோணமலையில் உரையாற்றிய சம்பந்தர் அபிவிருத்திக்காக உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டோம் என தெட்டத்தெளிவாக கூறியுள்ள நேரத்தில் அக்கட்சியின் மாநாட்டு தீர்மானங்கள் யாரை நோக்கி அபிவிருத்தியை கோருகின்றன? கடந்த வருடம் வேலையற்ற கிழக்கு பட்டதாரிகளை சந்தித்த சம்பந்தர் 'ஆயிரம் வேலைவாய்ப்புளை கேட்டாலும் என்னால் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அவை அரசியல் தீர்வு நோக்கிய கருமங்களை பாதிக்கும் என்பதால் அவற்றை நான் கோரமாட்டேன்' என சொல்லியிருந்தமை தெரிந்ததே.



ஒரு புறம் வருகின்ற நிதி ஒதுக்கீடுகளை திருப்பி அனுப்பிக்கொண்டும் மறுபுறம் அமைச்சு பதவிகளை பெறுபவர்களை துரோகிகள் என்று வசைபாடிக்கொண்டும் அரசியல் செய்கிற தமிழரசு கட்சியினர் நிதியொதுக்கீடுகளையும்,வேலைவாய்ப்புகளை பூட்டிய மாநாட்டு மண்டபத்துக்குள் கோருவது யாரை ஏமாற்றுவதற்கான பித்தலாட்டங்கள்? இந்த மாநாடுகளில் கலந்து கொள்கின்ற பேராளர்கள் எல்லாம் யார்? என்று கேட்க தோன்றுகிறது.

ஐக்கிய தேசிய கட்சி வீழ்கின்ற ஒவ்வொரு தருணங்களிலும் ஓடிச்சென்று அந்த ஆட்சியை காப்பாற்ற முட்டுக்கொடுக்கின்ற இவர்கள் இதுவரை ஒரு முன்னாள் போராளியையேனும் விடுதலை செய்யமுடியாதவர்களாயிருக்கின்றார்கள். அபிவிருத்திக்காக வடக்கு மாகாண சபைக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பத்தில் மண்ணை வாரி இறைத்தவர்கள் இந்த தமிழரசு கட்சியினர். கேவலம் கல்முனை உபசெயலகத்தை தரமுயர்த்தும் ஒரு கீரைப்பாத்தி சாதனையைக்கூட செய்யமுடியாதவர்கள் மாநாடுகளில் தீர்மானங்களை நிறைவேற்றி என்ன செய்யபோகின்றார்கள்? இதனால்தான் மாநாட்டு மண்டபத்தை சுற்றி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட காணாமல்போனவர்களின் உறவினர்கள் துரோகிகளே என்று கூச்சலிட்டு உங்களை தூற்றியுள்ளனர்.

## இதுவரை 12000 அடியார்கள் காட்டுக்குள்.. (காரைதீவு நிருபர் சகா)



கதிர்காம ஆடிவேல்விழாவிற்காக ஒரேநாளில் 6ஆயிரம் பாதயாத்திரீகர்கள் காட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

இந்தளவு அதிகமளவான பாதயாத்திரீகர்கள் காட்டுக்குள்பிரவேசித்தமை முதல்தடவை என ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

வரலாற்றுப் பிரசித்திபெற்ற உகந்தமலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல்விழாவிற்கான கொடியேற்றத் திருவிழாவில் கலந்துகொண்டு அனைவரும் புறப்பட்டனர்.



அன்றிரவு அவர்கள் வாகூரவெட்டை எனுமிடத்தில் இரவுப்பொழுதைக் கழிப்பர். அங்கு அவர்கள் அநாயாசமாக மகிழ்ச்சியுடன் இருப்பதைக்காணலாம்.

இதுவரை 12,000 அடியார்கள் காட்டுப்பாதையால் கதிர்காமம் செல்கின்றனர்.

## மின்சாரப் பிரச்சினை - இரண்டு வாரங்களுக்குள் தீர்வு

மின்சாரத்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு இரண்டு வாரங்களுக்குள் தீர்வு வழங்கப்படும் என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பேச்சுவார்த்தை பொறியியலாளர்களுடன் மேற்கொள்ளப்படும். பாவனையாளர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில், துரித தீர்வை வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

எதிர்காலத்தில் எந்த வகையிலும் மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாது. கடந்த 26ஆம் திகதி மின்சாரத்துறையுடன் சம்பந்தப்பட்ட பல அமைப்புக்கள் ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர், இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## புனித மிக்கேல் கல்லூரியில் விஞ்ஞான கண்காட்சி மற்றும் சஞ்சிகை வெளியீடு

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலையின் விஞ்ஞான கண்காட்சியும்,"மிக்கேலின் விஞ்ஞானக்குரல்" சஞ்சிகை வெளியீட்டு விழாவும் வியாழக்கிழமை(4.7.2019) காலை கல்லூரியின் முதல்வர் பயஸ் ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமாரும், கௌரவ அதிதியாக மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக்கல்வி பணிப்பாளர்(நிருவாகம்) திருமதி. சுஜாதா குலேந்திரகுமாரும், சிறப்பு அதிதியாக வலயக்கல்வி அலுவலகத்தின் விஞ்ஞானப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ரீ.ஞானசேகரம் உட்பட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.இதன்போது மாணவர்கள் ஆற்றல்களையும்,திறமைகளையும் கொண்டு உருவாக்கப்பட்ட சுமார் 100மேற்பட்ட விஞ்ஞான ரீதியான விடயங்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
கல்லூரி கூடைப் பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றுவரும் இக் கண்காட்சியினை பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும் நலன்விரும்பிகளும் பார்வையிட்டு வருகின்றனர்.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:

“ அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை “

## உன்னிச்சைக்குளமும் முற்றாக வற்றிவிடுமோ?



பொன்னைக்கொடுத்து நீரை வாங்கும் நிலைமையும் வரலாம்? என்பது, எண்பத்தைந்துகளில் உன்னிச்சைக் குளத்தில் அதிகமாக நீர் வற்றி, இப்போ இருக்கின்ற அணைக்கட்டுப்பக்கத்தில் இருந்து அடுத்தப்பக்கம் குளத்தின்ட நடுவினூடாக பயணித்த ஞாபகம் இப்போவும் இருக்கின்றது' என்கிறார் உன்னிச்சை குளக்கட்டின் அருகில் வாழ்ந்து கொண்டிருக்கும் சின்னத்தம்பி.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரியதொரு குளமாக உன்னிச்சைக்குளம் உள்ளது. இக்குளத்தினை நம்பியே பல ஏக்கர்களில் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. மட்டக்களப்பின் நகர் பகுதியின் பல இடங்களுக்கு உன்னிச்சைக்குளத்தில் இருந்து பெறப்பட்ட நீரே குடிநீராக வழங்கப்படுகின்றது. கால்நடைகளும், மிருகங்கள் பலவும் உன்னிச்சைக்குளத்து நீரினை நம்பியே வாழ்கின்றன. அதேபோன்று நீர்வாழ் உயிரினங்கள் பலவும் உன்னிச்சைக் குளத்திலே வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற வரட்சி நிலைமை காரணமாக உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டமும் வெகுவாக குறைவடைந்திருக்கின்றது. குளத்தின் பெரும்பான்மைப் பகுதிகள் வரண்டுபோன நிலங்களாகவே காணப்படுகின்றன. குளத்தின் வான்கதவினை அண்டிய குறித்த சிறுபகுதியில் மாத்திரமே நீர் காணப்படுகின்றது. 33அடி உயரத்திற்கு நீரினை கொள்ளக்கூடிய



உன்னிச்சைக்கும் வெறும் மூன்றரையடி அளவிலான உயரத்திற்கே நீரை கொண்டிருக்கிறது. குளத்தின் நீர்மட்டம் அதிகரித்தால் நீர் வழிந்தோடக்கூடிய வானுக்கும் தற்போது நீருள்ள இடத்திற்குமான தூரம் 100மீற்றர் அளவில் உள்ளது.

கடந்த வருடம், இதே காலப்பகுதியில் குளித்த இடங்கள் வெறும் தரைகளாக காணப்படுகின்றன. புதியதாக அணைக்கட்டுக்கள் கட்டப்பட்டு, குளம் புனரமைக்கப்பட்டு ஒரு தசாப்தங்களாகிய நிலைகளில் இந்த வருடம் தான் குளத்திற்குள் இருந்த கற்பாறைகள் எல்லாம் வெளிப்படுவதாக அருகில் உள்ளவர்கள் கூறுகின்றனர்.

1980 அல்லது 1985 காலப்பகுதிகளில் இவ்வாறு உன்னிச்சைக்குளம் வற்றிய ஞாபகம் உள்ளதாகவும் இந்தப்பக்கத்தில் இருந்து அடுத்தபக்கம் குளத்தின் நடுவால் நடந்து சென்றதாகவும் கூறுகின்றனர். அதேநிலை இன்னமும் வராவிட்டாலும் அதே நிலைக்கு, இதேபோன்று மழைபெய்யாமல் வெயில் எறித்தால் வந்துவிடும் என்கின்றனர்.

குளத்தின் நடுவில் குடிசை அமைத்து, மீன்பிடியில் ஈடுபடும் நிலைமையைக்கூட தற்போதைய வரட்சி நிலை உருவாக்கியுள்ளது. குளத்தின் அடிவடிச்சலால் மாத்திரம் நீர்வடிந்தோடுகின்றது. இவ்வரட்சி தொடர்ந்தால், அதனாலும் நீர் ஓடாது. அதற்கு பிறகு வாய்க்கால் வெட்டியும் தண்ணீர் எடுக்கமுடியாதென்கின்றனர். இப்பேச்சு வரட்சியின் நிலையினையே காட்டுகின்றது. உன்னிச்சைக்குளத்தினை நோக்கி பலர் ஒவ்வொரு நாட்களும் சுற்றுலா செல்வதுபோன்று செல்வதுண்டு, குளத்தில் குளித்து மகிழ்வதுமுண்டு.

அவ்வாறு இப்போது, குளத்தினைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, எதிர்வரும் நாட்களையும் எண்ணி கவலைப்படுவதனையே காணமுடிகின்றது. குளத்தின் ஊற்றில்தான் அருகில் உள்ளவர்கள் கிணறுதோண்டி நீரினை பெற்றுக்கொள்வதுண்டு. தற்போதைய நிலையில் குளத்தில் நீர்வற்று ஏற்பட்டுள்ளமையினால் அருகில் உள்ளவர்களுக்கு குடிநீரும் சவாலாகியிருக்கின்றது. பயிர்களும் நீரின்றி அழியும் நிலையில் உள்ளன. இவ்வாறான சூழலில், பல இடங்களுக்கு உன்னிச்சைக்குளத்து நீரே குடிநீராக மாறியிருக்கின்ற நிலையில், உன்னிச்சைக்குளம் முற்றாக வற்றினால் இதன் மூலமாக குடிநீரினைப்பெற்றுக்கொள்ளும் பலரின் நிலையும்கூட கேள்விக்குறியாகும். தற்போதைய இக்கட்டான நிலையில்,

இருக்கின்ற நீரினை வீண்விரயம் செய்வதனைத் தவிர்த்து, நாலுநாள் பயன்படுத்திய நீரினை ஐந்தோ, ஆறோ நாட்கள் பயன்படுத்தும் வகையில் சிக்கனத்தினை மேற்கொள்ள வேண்டும். நீர் வீண்விரயத்தினை தவிர்ப்பதற்கான விழிப்புணர்வினையும், தற்போதைய உண்மைநிலையினையும் மக்களுக்கு புகட்டவேண்டிய நிலையும் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு இருக்கின்றது. மழைபெய்யவேண்டிய காலங்களில் மழை இல்லாமல் போயிருக்கின்றமை தண்ணீருக்காக காத்திருக்கும் நிலையினை

**படுவான் பாலகன்**

உருவாக்கியுள்ளது. வரட்சி நீடித்தால் பொன்னைக்கொடுத்து நீரைவாங்கும் நிலைமை கூட ஏற்படலாம். மனிதவாழ்வுக்கு அத்தியவசியாமானது நீர், இதனை புரிந்து அனைவரும் செயற்பட வேண்டியதும், எதிர்காலத்தில் இயற்கை வளங்களை அழிக்காது பாதுகாத்துகொள்வதையும் நோக்காக கொள்ள வேண்டும். இதன்மூலமே எதிர்கால சந்ததிகளும் இயற்கையை வளங்களை கொண்டு இனிமையாக வாழலாம்.

தொடர்ச்சி...

## பட்டறிவு

டச்சு மொழி மூல நூலில் இருந்து இவற்றைப் புரிந்து கொள்வது அவ்வளவு இலகுவல்ல. மேலும் சமீபத்தில் இப்படி 300 ஆண்டுகளுக்கு முந்திய டச்சு மொழி நூலொன்றின் சில வரிகளை ஆம்ஸ்டர்டாமில் உள்ள ஒரு டச்சு எழுத்தாள நண்பரிடம் விளக்கம் கோரியிருந்தபோது அதற்கு அவர்கூட சிரமப்பட்டார். இது பழமையான டச்சு மொழி இப்போதுள்ளவர்களால் விளங்கிக் கொள்ள சற்று கடினம் என்றார். தோராயமாகத் தான் எனக்கு மொழிபெயர்த்து காட்டினார்.

வெலென்டின் எழுதிய இந்தத் தொகுப்பு இலங்கையின் சிவில் துறையில் பணியாற்றிய அன்ரூ ஆர்மர் (Andrew Armour) என்பவரால் முதல் தடவை மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதனை அவர் 1806-09 காலப்பகுதியில் இலங்கையின் நீதியரசராக இருந்த சேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டனுக்கு (Sir Alexander Johnston) சமர்ப்பித்திருக்கிறார். ஆனால் இந்த பிரதி ஒரு மோசமானதும், பிழையானதும் மொழிபெயர்ப்பு என்று




பின்னர் சேர் எமர்சன் டெண்னனன்ட் (Sir Emerson Tennent) குறிப்பிடுகிறார். அதன் பின்னர் இன்னொரு தடவை இந்தியாவில் 1783 – 1821 காலப்பகுதியில் பணியாற்றிய பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பனியைச் சேர்ந்த கேணல் கொலின் (Colonel Colin Mackenzie) என்பவரால் ஒரு பகுதி மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

பின்னர் இந்த நூலின் சில பகுதிகளின் சுருக்க மொழிபெயர்ப்பை இலங்கையின் தொழிற்சங்க முன்னோடியும், ஆய்வாளருமான பறங்கி சமூகத்தைச் சேர்ந்த புல்ஜென்ஸ் (A. E. Buultjens) மொழிபெயர்த்தார் (Orientalist -1885-86, 1888-89, 1891). அதன் பின்னர் தான்இந்த நூலை சின்னப்பா அரசரட்ணம் விரிவாக ஆய்வு செய்து 1977இல் “François Valentijn's Description of Ceylon” என்கிற நூலை வெளியிட்டிருக்கிறார். அந்த நூலே இன்று வரை வெலென்டின் குறித்த ஆய்வுகளுக்கு பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரசரட்னத்தின் அந்த நூலில் முதல் 12 அத்தியாயங்கள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. சிங்கள வரலாற்று ஏடான “ராஜாவலிய”யவை மொழிபெயர்ப்பதற்கான அனுமதியையும் வெலென்டின் அப்போது பெற்றிருந்ததாக எஸ்.அரசரட்னம் தனது நூலில் குறிப்பிடுகிறார். “ராஜாவலிய”வில் குறிப்பிடாத அரசர்களின் குறிப்புகளை வெலண்டின் கண்டெடுத்திருந்தார். அரசாட்சிகளின் முன்னுக்குப் பின் முரணான காலவரிசை குறித்து ஆழமாக ஆராயந்திருப்பதை அவர் கண்டெடுத்த தகவல்களில் இருந்து அறிய முடியும். குறிப்பாக “தோஸ் ராஜா” என்கிற அரசர் பற்றிய விபரம் வியப்பை அளிப்பவை. வெலண்டினின் உச்சரிப்புப் பிழைகளால் அதில் உள்ள தகவல்களை சரியாக விளங்கிக் கொள்வதிலும் மற்றவர்களுக்கு வியாக்கியானப்படுத்துவதிலும் வரலாற்றாசிரியர்கள் பெரும் திண்டாட்டத்துக்கு உள்ளாவார்கள் என்பது நிச்சயம்.

(அடுத்த வாரம் தொடரும்)



# விளையாட்டு

## கிரிக்கட் உலகக் கிண்ணம் 2019



## அரையிறுதிக்கு தெரிவாகும் அணிகள் எவை?

இடம்பெற்றுவரும் 12ஆவது உலகக் கிண்ண கிரிக்கட் தொடரானது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இதுவரை இடம்பெற்று முடிந்த 40 போட்டிகளின் முடிவுகளுக்கமைய அவுஸ்திரேலியா மற்றம் இந்தியா அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளதோடு இலங்கை உட்பட ஐந்து அணிகள் தொடரிலிருந்து வெளியேறியுள்ளது. அரையிறுதிக்கு தெரிவாகும் ஏனைய இரண்டு அணிகளுக்கான போட்டியில் இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் போராடிக்கொண்டிருக்கின்றன.

**அதிக ஓட்டங்களை பெற்ற வீரர்கள்**

ரோஹித் சர்மா - 544
டேவிட் வோனர் - 516
ஆரோன் பின்ச் - 504
சகிப் அல் ஹஸன்- 476
ஜோய் ரூட் - 476



**அதிக விக்கட்டுக்களை வீழ்த்திய வீரர்கள்**

மிட்சல் ஸ்டார்க் 24
லுக்கி பெர்குஸன் 17
முகமட் அமிர் 16
ஜோப்ரா ஆர்சர் 16
முஸ்தபிசுர் ரஹ்மான் 15




## 40 போட்டிகளின் முடிவில் அணிகளின் புள்ளி நிலை

| அணிகள் | போட்டிகள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நிகர ஓட்ட விகிதம் |
|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 8 | 7 | 1 | 14 | +1.00 |
| இந்தியா | 8 | 6 | 1 | 13 | +0.81 |
| நியூசிலாந்து | 8 | 5 | 2 | 11 | +0.57 |
| இங்கிலாந்து | 8 | 5 | 3 | 10 | +1.00 |
| பாகிஸ்தான் | 8 | 4 | 3 | 9 | -0.79 |
| இலங்கை | 8 | 3 | 3 | 8 | -0.93 |
| பங்களாதேஸ் | 8 | 3 | 4 | 7 | -0.19 |
| தென்னாபிரிக்கா | 8 | 2 | 2 | 5 | -0.08 |
| மேற்கிந்திய தீவுகள் | 8 | 1 | 6 | 3 | -0.33 |
| ஆப்கானிஸ்தான் | 8 | - | 8 | - | -1.41 |

பிரித்தானியாவின் காரைதீவு ஒன்றியத்தின் வருடாந்த விளையாட்டு விழாவும் ஒன்று கூடலும் கடந்த சனிக்கிழமை சுவிண்டன் பகுதியில் சிறப்பாக நடைபெற்றது. அப்போது பிடிக்கப்பட்ட படம்.



## சகல துறை ஆட்டத்தில் சகிப் அல் ஹஸன் புதிய சாதனை



உலகக் கிண்ண தொடர் ஒன்றில் 500 ஓட்டங்களையும் 10 விக்கட்டுக்களையும் வீழ்த்திய வீரர் என்ற சாதனையை பங்களாதேஸ் வீரர சகிப் அல் ஹஸன் தனதாக்கிக்கொண்டார் இவர் உலகக்கிண்ணத் தொடரில் இதுவரை 542 ஓட்டங்களையும் 11 விக்கட்டுக்களையும் வீழ்த்தி இச் சாதனையை பெற்றுக்கொண்டார். இதற்கு முன்பு நியூசலாந்து வீரர் ஸ்கொட் ஸ்டைரிஸ் 2007ம் ஆண்டு 449 ஓட்டங்களையும் 9 விக்கட்டுக்களையும் பெற்றதே சாதனையாக இருந்தது குற்ப்பிடத்தக்கது.

## மாகாணமட்டப் போட்டியில் ஹொக்கி லயன்ஸ் சாம்பியன்



காரைதீவு நிருபர் சகா

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய கிழக்கு மாகாணமட்ட ஹொக்கி போட்டியில் அம்பாறை மாவட்ட ஹொக்கிலயன்ஸ் அணி முதலிடத்தைப் பெற்று சாம்பியனானது.

அம்பாறை மாவட்ட அணியில் காரைதீவு ஹொக்கிலயன்ஸ் அணியினரே உறுப்பினர்களாவர். இந்த அணி மூன்றாவது தடவையாக கிழக்கில் முதலிடம்பெற்று தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.



இப்போட்டியில் திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை ஆகிய மாவட்ட அணிகள் பங்கேற்றன. இப்போட்டி காரைதீவு விபுலாநந்த மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் திருகோணமலை அணியும் அம்பாறை மாவட்ட அணியும் மோதின. இப்போட்டியில் அம்பாறை மாவட்ட காரைதீவு ஹொக்கிலயன்ஸ் அணி 2-0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றிவாகை சூடியது.

அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் அமிர்அலி மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் முன்னிலையில் இப்போட்டி நடைபெற்றது.

த.லவன் தலைமைதாங்கும் காரைதீவு ஹொக்கிலயன்ஸ் கழகம் கிழக்கில் தொடர்ச்சியாக சாதனைபடைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# NELSON COLLEGE LONDON

NCL
NELSON COLLEGE LONDON

## Now Enrolling

Are you 18+
CALL US

Business Course:
0208 514 0033

Hospitality Management
0203 500 0239



## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management

- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management

FIND OUT MORE
www.nelsoncollege.ac.uk

EMAIL US
info@nelsoncollege.ac.uk

IN PARTNERSHIP WITH

LONDON METROPOLITAN UNIVERSITY

Pearson

# ஆயுதம் ஏந்தப் போவதாக எச்சரிக்கும் தலைவர்கள், தம் பிள்ளைகளை போருக்கு அனுப்பத் தயாரா?

வேதநாயகம் தபேந்திரன்


தமிழர்களுக்கு தீர்வு கிடைக்காவிட்டால்
ஆயுதம் ஏந்தி போராடுவது பற்றி
சிந்திக்க வேண்டி வரும்
இரா.சம்பந்தன் அரசுக்கு எச்சரிக்கை
(யாழ்ப்பாணம்)
ஆயுதம் ஏந்திப் போராடினால் தான் அரசியல் தீர்வு குறித்து ஆக்கபூர்வமான கருமங்களைப் பெறமுடியும் என்றால் அதுகுறித்து சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
(23ஆம் பக்கம் பார்க்க)

தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் ஆயுதம் ஏந்திப் போராடுவது பற்றிச் சிந்திக்க வேண்டி வரும்.' -- இரா. சம்பந்தன் அரசுக்கு எச்சரிக்கை.

இது இவ்வாரம் வந்த பரபரப்பான ஊடகச் செய்தி.
ஆயுதம் ஏந்திப் போராடுவதுபற்றி சொல்லக் கூடிய தகுதி எத்தனை தமிழ் தலைவர்களுக்கு இருக்கிறது எனக் கேள்வி கேட்டால் விடை என்ன?

1070 களின் பிற்பகுதியில் கருக்கொண்டு, 1983 யூலை மாதத்திற்குப் பின்பாக வீறுகொண்டெழுந்த தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு எத்தனை தமிழ் தலைவர்கள் தமது பிள்ளைகளை அனுப்பினார்கள்?

நானறிந்த வரையில் பருத்தித்துறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இ. துரைரத்தினம், உடுவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தர்மலிங்கம் ஆகியோரின் பிள்ளைகள் மட்டுமே ஆயுதப் போராட்டத்திற்குச் சென்றனர்.

பருத்தித்துறை எம்பியின் மகன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தவர். 1987 யூலை 05 ஆம் திகதியன்று நெல்லியடி இராணுவ முகாம் மீது மில்லரால் நடத்தப்பட்ட முதலாவது கரும்புலித் தாக்குதல் சம்பவத்தின் பின்பான சண்டையில் மரணமடைந்தார்.

மேஜர் கமல் என மதிப்பளிக்கப்பட்டார். உடுவில் தொகுதி எம்பி தர்மலிங்கத்தின் மகன் சித்தார்த்தன் புளொட் இயக்கத்தில் இணைந்து போராடினார். முன்பும் பலமுறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்.

தற்போதும் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

அவரது தந்தை தர்மலிங்கம் தமிழ் இயக்கம் ஒன்றினால் முன்னாள் எம்பி ஆலாலசுந்தரத்துடன் சேர்ந்து கடத்திச் செல்லப்பட்டு 1984 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர்களை விட வேறு அரசியல் தலைவர்கள் தமது பிள்ளைகளை ஆயுதப் போராட்டத்திற்கு அனுப்பி வைத்தாகத் தெரியவில்லை.

இம் மண்ணில் தாயக விடுதலைக்கான போர் வெடித்த போது தாம் பாதுகாப்பாக தமிழகத்திற்குச் சென்றனர்.

தமது பிள்ளைகளை பிரித்தானியா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் என அனுப்பி வைத்தார்கள்.

1977 இல் வட்டுக்கோட்டையில் தமிழீழப் பிரகடனத்தைச் செய்தார்கள். அவ் வருடம் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இம் முறைதான் சிறிலங்கா நாடாளுமன்றுக்கு இறுதியாகப் போட்டியிடுகின்றோம். இனி சுதந்திர தமிழீழத்தில் தான் தேர்தலில் போட்டியிடுவோம் என வீறாப்பாகக் கதைத்தனர்.

இளைஞர்களை உசுப்பேத்தினார்கள். போர் உக்கிரம் பெறப் போராட்டக் களத்திலிருந்து தாமும் தமது பரிவாரங்களும் அகன்று சென்றார்கள்.

இம் மண்ணில் படித்த, படிக்காத ஏராளம் இளைஞர்கள் போராட்டத்தில் இணைந்து தமது இன்னுயிரைக் கொடுத்தார்கள்.

போராட்டம் 30 வருடங்கள் நீண்டது. பல வெற்றிகள். இறுதியாக முழுமையாகத் தோல்வியடைந்தது.

அது போன்றதொரு போராட்டத்தை மீளக் கட்டியெழுப்பக் கூடிய களநிலையோ, தளநிலையோ, மக்கள் உளநிலையோ இல்லை.

இப்படியான நிலையில் வெறுமனே உசுப்பேற்றும் அரசியல் தேவையில்லை.

அப்படி மீண்டுமொரு ஆயுதப் போராட்டம் வந்தாலும் சவால் விடும் தலைவர்களில் எத்தனை பேர் தமது பிள்ளைகளை அனுப்பி வைப்பார்கள். போர்க்குணம் மிக்க தலைமுறையின் காலம் மலையேறி விட்டது.
சிங்களத்தின் ராஜதந்திரத்தை அவர்களது பாணியிலேயே வெல்லும் வழி பார்க்க வேண்டும். அறிக்கை அரசியல் விடிவைத் தராது எனத் தெரியாத தலைவர்களா இவர்களெனக் கேள்வி கேட்போருக்கு உங்கள் விடையென்ன? ?

---

தொடர்ச்சி...

இருந்தநமது நாட்டின்அபிவிருத்திக்கு உதவக்கூடிய எத்தனை மேதைகளை நாம்இழந்திருப்போம்.

பகிடி வதைகாரணமாக நிகழ்ந்தஉயிர் இழப்புகள் அநேகம்.

மேலும் பகிடிவதை காரணமாகஏற்படும் மனஅழுத்தத்தைத் தாங்கிகொள்ளமுடியாமல் தற்கொலை செய்து கொண்டமாணவர்களும் உண்டு. சிலர் பகிடிவதையினால் சித்திரவதைக்குஆளாகி வாழ்நாள்பூராவும் சிகிச்சைபெறும் மனநோயாளிகளாக உடல்ஊன நோயாளிகளாக வாழ்ந்தும்வருகின்றனர்.

கனவுகளோடும் பெரும்மகிழ்ச்சியோடும் தமது பிள்ளைகளைக் கடன்பட்டுபல்கலைக்கழகம் அனுப்பும்பெற்றோரின் மனம்என்ன பாடுபடும், அவ் அப்பாவிகள் மனோநிலைஎன்ன?

பகிடி வதையைவிட இன்னுமோர் அரக்கனும்பல்கலைக்கழக வாயிலில் வந்துகுந்தி விட்டான் அவனே பாலியல்தொல்லை அரக்கன்.

பெண்களை இன்னும்குறைவாக எண்ணும்அவர்களை குறைவாக, ஒருவகையில் அடிமைகளாக நடத்தும்ஓர் சமூக அமைபில்தான் இன்னும்நாம் வாழுகின்றோம். பல்கலைக்கழகத்தில் பெண் மாணவிகளுக்கு ஆண்மாணவர்கள் தரும்தொல்லைகள் மிகமிக அதிகம்.

மனதை வதைப்பதுடன் சந்தர்ப்பம்பார்த்து உடலை வதைக்கும் செயலிலும்இவர்கள் ஈடுபடுகின்றனர். இத்தகைய உள,உடல் துன்புறுத்தல்களை வெளியில் சொல்லமுடியாத கலசாரச் சூழலில்வளரும் பெண்கள் மனதுள் அவர்களின்பாலியல் சேட்டைகளை அடக்கி அடக்கி வைப்பதால் பெரும்மன நோய்க்குஆளாகுவதுடன் தற்கொலை செய்யும் முடிவுக்கும் வருகிறார்கள். சிலர்தற்கொலை செய்தும்உள்ளனர்.

என்னகொடுமை இது?

பெண்ணாக வாழவேமுடியாதா?

இரு வாரங்களுக்குள்முடித்த பகிடி வதையை முடித்துக் கொண்ட அன்றைய நிலைபோலஅல்லாது ஆறுமாதங்கள் அல்லதுசிலவேளைகளில் ஒருவருடம் வரை சிலபல்கலைக்கழகங்களில் இந்த பகிடி வதைநிலை நீடிக்கிறது, அந்த ஒருவருடமும் முதல்வருட மாணவர்கள் சிரேஸ்டமாண்வர்களுக்கு அடங்கிஒடுங்கி அடிமைகளாகவாழ் வேண்டும்என நிர்ப்பந்திக்கப் படுகின்றனர், அக்காலங்களில் அவர்களுக்கு எதிலுமே முன்னுரிமைகிடையாது.அவர்கள்உடை நடைபாவனை எல்லாம்அடிமைகள் போலவேஉள்ளன.

இதனால் மாணவர்மத்தியில் அடிதடிகளும்ஏற்படுவதுண்டு.

ராகிங் எனும்இவ்வரக்கன் மெல்லமெல்ல வளர்ந்துபேருருக் கொண்டு சமூகத்தையே அழிக்கும்அரக்கனாக இன்றுகொக்கரித்து நிற்கிறான். இவனைக்கண்டு பல்கலைக்கழகநிர்வாகங்கள்கூட அஞ்சுகின்றன. அழிக்கப் பயப்படுகின்றன, அழித்தால் மாணவர்கள் வேறுவகையில் கிளர்ச்சிபண்ணுவார்கள் என்பதே அவ்வச்சத்துக்குக் காரணமாகும்.

இப்பெரும் சவால்களை எதிர்கொள்வது எங்கனம்? அழிக்கமுடியாத அரக்கனாகபேருருக்கொண்டு நிற்கும்இவ்வரக்கனை அழித்தல் எங்கனம்?

பாலியல் தொல்லைகள்மீது கவனம்செலுத்துவதற்காக பல்கலைக்ழகமானிய ஆணைக்குழுவினால், பால்சமத்துவ பகுதிஒன்று




ஸ்தாபிக்கப்பட்டும்இருக்கிறது. பேராசிரியை உமா குமாரசாமிஇதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார், ஒவ்வொருபல்கலைக்கழகங்களிலும் இது விஸ்தரிக்கப்பட்டு விசேடமாக பெண்கள் மீதானபாலியல் துன்புறுத்தல்கள்மீது விசேடநடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

தேசிய அச்சுறுத்தலாக ஓர்தேசிய பிரச்சனையாக மாறியுள்ள இப்பகிடிவதையைப் பாலியல்துன்புறுத்தலை இல்லாமலாக்குவது எங்ஙனம்என்பதையிட்டு கலந்துஆலோசிக்கும் முகமாகபல்கலைக் கழகமானிய ஆணைக்குழு 03.07.2019 புதன்கிழமை ஓர் கருத்தரங்கையும்பயிற்சிப்பட்டறையையும் கொழும்புஇலங்கை மன்றக்கல்லூரியில் நடத்தியது

மானிய ஆணைக்குழுவின் கீழ்இயங்கும் அனைத்துப்பல்கலைக்கழகங்களினது உபவேந்தர்களையும் நிறுவபணிப்பாளர்களையும் அவர்களோடுஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் மானியஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பேரவைஉறுப்பினர்களையும் மானிய ஆணைக்குழு இக்கருத்தரங்கச்செயலமர்வுக்கு அழைத்திருந்தது.

இதுசம்பந்தமான தகவல்களை உபவேந்தர்கள் நியமனபேரவை உறுப்பினர்களுடன் பரிமாறி அவர்களைவலுமையுடைவர்களாக்குவது அவர்களின்அதிகாரத்தையும் செயற்பாட்டையும்அவர்களுக்கு உணர்த்துவது இச்செயலமர்வின்நோக்கமாகும்

செயலமர்வில் இப்பிரச்சனையைஆராய்ந்து இதில்தேர்ச்சி பெற்ற ஆய்வாளர்களும் பேராசிரியர்களும் அருமையானஉரைகள் நிகழ்த்தினர்.

பல தகவல்களை அவர்கள்வழங்கினர் அனைவரையும்மேலும் சிந்திக்க வைத்தனர். கிழக்குப் பல்கலைக்கழகபேரவை நியமனஉறுப்பினரான நானும்கலந்து கொண்டேன்.

அங்கு கூறப்பட்டகருத்துகள் எடுத்தமுடிவுகள் என்பன மிகமுக்கியமானவை. அவ்வனுபவங்களையும் கருத்துகளையும் தொடர்ந்துஎழுதவுள்ளேன்

அடுத்த வாரம்சந்திப்போம்
( தொடரும்)

# பட்டறிவு

## வரலாற்றில் காணாமலாக்கப்பட்ட பிரான்சாஸ் வெலென்டின்!




போர்த்துகேயர்களின் முடிவும், டச்சுக் காரர்களின் ஆரம்பத்தையும் குறித்து பிலிப்பு பால்டேயு, ரொபர்ட் நொக்ஸ், கெப்டன் ரிபைரோ போன்றவர்களின் வரிசையில் பிரான்சாஸ் வெலென்டின் (François Valentijn) என்கிற வரலாற்றாசிரியரும் முக்கியமானவர். இவர்களில் வெலென்டின் மாத்திரம் இலங்கையில் இருந்ததில்லை. அவரின் நூல்கள் உலக அளவில் பிரசித்திபெற்றபோதும் இலங்கையின் வரலாற்றாசிரியர்களால் அந்தளவு பேசப்பட்டதில்லை. இவர்களின் வரிசையில் யாழ்ப்பாணம், வன்னி கிழக்கு பகுதிகளில் இருந்த தமிழ் அரசுகள் குறித்து பேசியதால் கெப்டன் ரிபைரோ வரலாற்றசிரியர்களால் கண்டுகொள்ளப்படவில்லையோ அதுபோல பிரான்சாஸ் வெலென்டினும் வடக்கு – கிழக்கு பகுதியில் இருந்தவற்றை பதிவு செய்ததால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார் என்று சந்தேகம் கொள்ள இடமுண்டு.

வெலென்டின் 17.04.1666ஆம் ஆண்டு ஒல்லாந்தில் டோர்றே (Dordrecht) என்கிற இடத்தில் பிறந்தார். பிற்காலத்தில் இறையியல் துறையில் பட்டம்பெற்று சீர்திருத்த தேவாலயப் பணிகளில் ஈடுபட்டார். 1684இல் கிழக்கிந்திய நாடுகளுக்கான மதத் தூதுவராக நியமிக்கப்பட்டு கிழக்கிந்திய நாடுகளுக்கான சேவைகளுக்கு அனுப்பப்பட்டார். ஒல்லாந்திலிருந்து 13.05.1685இல் பத்தவியாவுக்கு புறப்பட்டார். இந்தோனேசியாவில் Batavia எனும் இடத்தில் தான் அன்றைய டச்சு கிழக்கிந்திய கம்பனியின் தலைமையகம் இயங்கியது. ஆறு மாதங்களின் பின்னர் 30.12.1685 அன்று தான் பத்தவியாவுக்கு வந்து சேர்ந்தார். பத்தாண்டு கால சேவையில் பின்னர் மீண்டும் 1695 ஒல்லாந்துக்கு திரும்பினார். அவர் மீண்டும் மிஷனரிப் பணிகளுக்கு தூதுவராக நியமிக்கப்பட்டு பத்தவியாவுக்கு குடும்பத்துடன் 27.12.1705 அன்று வந்து சேர்ந்தார் .[i] கிழக்கு ஜாவா தீவுகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்துக்கான போதகராக (army chaplain) 1706இலிருந்து கடமையாற்றினார். அவர் பத்தவியாவில் இருந்த காலப்பகுதியில் டச்சு கிழக்கிந்திய கம்பனியின் வலைப்பின்னலில் இருந்த காலனித்துவ நாடுகளில் பணிபுரிந்த சகல தரப்பினருடனும் தொடர்பில் இருந்ததால் அவர் பல்வேறு விபரங்களை தொகுத்துவந்தார். மீண்டும் 1714இல் ஒல்லாந்துக்குத் திரும்பினார். அங்கிருந்தபடிதான் அவர் “Oud en Nieuw Oost-Indiën” (பழைய புதிய கிழக்கிந்தியா) நூல் தொகுப்பை எழுதத் தொடங்கினார். 1726இல் ஐந்தாவது தொகுப்பு வெளிவந்தது. அடுத்த வருடம் 06.08.1627 அன்று அவர் காலம் ஆனார்.

இந்த இடைக்காலத்தில் அவர் இந்த தொகுப்பை மட்டுமல்ல பைபிளை மலே மொழிக்கு மொழி மாற்றம் செய்தார். மலே, ஜாவா போன்ற மொழிகளில் அகராதிகளையும் உருவாக்கினார். (மலே மொழி அகராதி இறுதிவரை அச்சாகவில்லை என்பது இன்னொரு கதை) முஸ்லிம் மதம் குறித்த ஆய்வொன்றையும் வெளியிட்டார்.

“பழைய புதிய கிழக்கிந்தியா” தொகுப்பானது இன்றும் 16-17 ஆம் நூற்றாண்டின் காலனித்துவ காலத்தை ஆராய்பவர்களுக்கு முக்கிய ஆதார நூலாக கருதப்படுகிறது. 5000க்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட சிறிய எழுத்தினாலான மொத்தம் ஐந்து தொகுப்புகளையும் 1724-1726 இரண்டு ஆண்டுகளுக்குள் வெளியிட்டார். அதை விட ஆயிரக்கணக்கான விளக்கப்படங்களும், ஓவியங்களும், வரைபடங்களும் உள்ளன. மக்களின் தோற்றம், அவர்களின் பண்பாடு, துறைமுகங்களின் அமைப்பு, நகரங்களின் வரைபடம், தாவரங்கள், விலங்குகள், சில முக்கிய சம்பவங்களைக் காட்டும் காட்சிகள் எல்லாம் அந்த கோட்டோவியங்களில் அடங்குகின்றன. அவை மிகவும் பயனுள்ளவை. இலங்கையில் டச்சு செய்த வியாபார நடவடிக்கைகளின் புள்ளிவிபரங்கள், வேட்டையாடி எடுத்துச் சென்றவை, இலங்கை அரசர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட பரிசுகள் காலி, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற கோட்டைகளுக்குப் பொறுப்பாக இருந்த தளபதிகளின் காலவரிசையான பட்டியல் எல்லாம் இந்த தொகுப்புகளில் அடக்கம்.

இந்த ஐந்து தொகுப்புகளிலும் இலங்கை குறித்து ஏராளமான விபரங்கள் அடகியிருந்தாலும் ஐந்தாவது தொகுப்பில் தான் இலங்கையைப் பற்றிய தனித் தலைப்பில் எழுதப்பட்டிருக்கிறது. அதில் 1382பக்கங்களைக் கொண்ட ஐந்தாவது தொகுப்பில் 456 பக்கங்கள் இலங்கைப் பற்றியவை.


வெலென்டின் கிழக்கு ஜாவா, பத்தவியா, கேப், அம்பொய்னா, பண்டா தீவுகள் போன்றவற்றில் வாழ்ந்து செவயாற்றியிருக்கிறார். ஆனால் இந்தியா, சுமாத்திரா, இலங்கை, மலாக்கா போன்ற நாடுகளுக்கு அவர் பயணித்தது கிடையாது. இந்த நூலில் ஆங்காங்கு சில விளக்கப் பிழைகள் இருப்பதற்கான காரணம் இதுவாக இருக்கக் கூடும். ஆயினும் இந்த நாடுகள் குறித்து இந்தளவு விளக்கமாக எழுதியவை அனைத்தும் பெறுமதியானவை.

வெலென்டின் பணி ஒய்வு பெற்று ஒல்லாந்தில் இருந்த காலத்தில் இந்த நூலை எழுதத் தொடங்கினார். ஏற்கெனவே அவர் கிழக்கிந்திய கம்பனியில் பணியாற்றிய போது சேகரித்த ஆவணங்கள், ஆதார்ணகள் என்பவற்றை கொண்டுவந்து சேர்த்திருந்தார். அவர் கிழக்கிந்திய கம்பனியில் பணிபுரிந்த கவர்னர்கள், படையதிகாரிகள், சிவில் அதிகாரிகள் போன்றோரிடம் இருந்து ஏராளமான ஆவணங்களையும், விபரங்களையும் பெற்றுக்கொண்டார். இலங்கையைப் பற்றிய விடயங்களைத் தொகுக்கும் போது இலங்கையில் 1703-1706 காலப்பகுதியில் கவர்னராக இருந்த ஜோன் சிமோன் ஓய்வு பெற்று ஒல்லாந்து திரும்பியதும் (Cornelis Joan Simons) உத்தியோகபூர்வமான பல ஆவணங்களை ஆராய்வதற்கான வாய்ப்புகளை அவருக்கு வெலென்டினுக்கு வழங்கினார். அதுபோல யாழ்ப்பாணத் தளபதியாக 1699 -1708 காலப்பகுதியில் பணியாற்றிய ஆதம் வான் (Adam Van der Duyn) தனது பணி ஓய்வின் பின்னர் ஒல்லாந்து திரும்பியதும் அது போலவே வெலென்டினுக்கு உதவியிருக்கிறார். இந்தக் காலப்பகுதியில் கிழக்கிந்திய கம்பனியில் பணியாற்றியவர்கள் அவர்கள்

என்.சரவணன்

பணியாற்றிய காலனித்துவ பிரதேசங்கள் குறித்து எழுதி வெளியிடுவது தடைசெய்யப்பட்டிருந்த காலம்.

வெலென்டின் இலங்கை பற்றி அதற்கு முன்னர் இலங்கைப் பற்றி பதிவு செய்த எழுத்தாளர்களான குறிப்பாக "Decadas Da




Asia" எழுதிய Diogo de Couto, "Decadas Da Asia" எழுதிய Joao de Barros அடுத்தது "Fatalidade Historica de Ilha de Ceilao" ('Historical Tragedy of the Island of Ceylon') எழுதிய Joao Ribeiro ஆகியோரின் எழுத்துக்கள் அதிகமாக உதவியிருந்தன.

அதுபோல இந்துத்துவம் பற்றிய சிறப்பாய்வுகளைச் செய்த டச்சு எழுத்தாளரான ஆப்பிரகாம் ரொஜேரியஸ் (Abraham Rogerius) என்பவருடன் சிறந்த நட்பைக் கொண்டிருந்தார். பிலிப் பால்டேயு (Phillipus Baldaeus) டானியல் ஹாவார்ட் (Daniel Havart) ரொபர்ட் நொக்ஸ் (Robert Knox) போன்றவர்களின் எழுத்துக்களும் அதிகம் உதவியிருக்கின்றன. ரொபர்ட் நொக்ஸின் "An Historical Relation of the Island Ceylon" நூல் அப்போது S. de Vriesஎன்பவரால் டச்சு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு 1692 ஆம் ஆண்டே வெளிவந்திருந்தது.

| தொகுப்பு இல | உள்ளடக்கம் | பக்கங்கள் | ஆண்டு |
|---|---|---|---|
| 1வது தொகுப்பு | டச்சு அதிகாரம் | 862 | 1724 |
| 2வது தொகுப்பு | அம்பொய்னா, அம்பொய்ன் சம்பவங்கள் | 778 | 1724 |
| 3வது தொகுப்பு | கம்போடியா, சியாம், பாளி, திமோர், பண்டா, போர்னியோ, மக்காசர் விவகாரங்கள், | 1244 | 1726 |
| 4வது தொகுப்பு | ஜாவா, பத்தாவியா, ஜாவா விவகாரங்கள், சீனா | 1145 | 1726 |
| 5வது தொகுப்பு | இலங்கை, பாரசீகம், மலாக்கா, சுமாத்திரா, வங்காளம், அர்ரகன், ஜப்பானுடனான வர்த்தகம் | 1384 | 1726 |

தொடர்ச்சி... (பக்கம் -07)



# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

## சூடு சாம்பலாச்சு போடியாரே

1958ம் ஆண்டு தொழிலாளர் தினமான மேதின விழாவை மட்டக்களப்பு மைதானத்தில் தமிழரசுக்கட்சி மிக கோலாகலமாக கொண்டாட வேண்டுமென முடிவெடுத்தது. விழாவின் இறுதியில் 'சூடு சாம்பலாச்சு போடியாரே' என்னும் நாடகத்தை மேடையேற்றுவது எனவும் முடிவெடுக்கப்பட்டு. இராஜதுரை அவர்கள் எழுதிய அந்நாடகம் சமகால அரசியல் கேலிகளும் கிண்டல்களுமாக தொகுக்கப்பட்டு, நகைச்சுவை நாடகமாக மேடையேறியது. இந் நாடகத்தை

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா**

பார்த்து ரசித்து பரவசம் அடைந்த தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் பின்வருமாறு பாராட்டு தெரிவித்திருந்தார். 'இராஜதுரையவர்கள் பேச்சால் மட்டுந்தான் கட்சியின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் சிறந்த பேச்சாளி என அறிவேன். ஆனால் அதைவிடவும் தன் நாடகத்தின் மூலமும் நடிப்பாலும் கொண்டு செல்லக்கூடிய வல்லமை நிறைந்தவராக இருக்கிறார்.' எனப் புகழாரம் சூட்டியிருந்தார்.

## தென்னிந்திய நடிகர்களின் சங்கமம்

இவ்வாறு நடிப்பில் தன் ஈடுபாட்டை முழுமையாக காட்டியமையினால் அந்த உந்து சக்தியின் காரணமாக இவர் தமிழ்நாட்டு திரையுலகத்தினரை நேசிக்கத் தொடங்கினார். இவ்வாசைக்கு முத்தாய்ப்பு வைத்தது போல் அக்காலத்தில் மக்களின் அபிமானத்தை பெற்றிருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ராமச்சந்திரனின் நட்பை

*அத்தியாயம்-08*

இவர் மிகவும் விரும்பினார். அதற்காக 1964ம் ஆண்டு இவரின் நண்பரான தென்னிந்திய "மாலை முரசு" நாளேட்டின் சினிமா ஆசிரியராக பணியாற்றி வந்த க.ஜெயபாண்டியனிடம் திரு.எம்.ஜி.ஆர். அவர்களை நேரில் சந்திக்க முடியுமா? என்ற கோரிக்கையை இராஜதுரை வைத்தார். ஜெயபாண்டியனும் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து இருவரையும் சந்திக்கவும் வைத்தார். மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும் இராஜதுரையும் எம்.ஜி.ஆர் வழங்கிய சிற்றுண்டியை அருந்திக் கொண்டே உரையாடினார்கள். விருந்து முடிந்ததும் எம்.ஜி.ஆர் அவர்களை இலங்கைக்கு வரும்படி திரு.இராஜதுரையவர்கள் அழைப்பு விடுத்தார். இதற்கு எம்.ஜி.ஆர் அவர்கள் உடன்படவில்லை. பின்பும் சளைக்காத இராஜதுரையவர்கள் மீண்டும் ஓராண்டுகளுக்கப் பின் தன் அழைப்பை எம்.ஜி.ஆரிடம் வைத்தார். அண்ணாதுரையவர்களிடம் இது பற்றி கலந்து ஆலோசித்து விட்டு அண்ணாத்துரையவர்களின் ஆலோசனையின் பேரில் எம்.ஜி.ஆரோடு அன்றைய முன்னணிக் கதாநாயகி அபிநயசரஸ்வதி சரோஜாதேவியும் அவரின் தாயாரும் இலங்கை புறப்படுவதாக தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்துக்கு அமைய அன்றைய புகழ்மிக்க பத்திரிகைகளான தினபதி, சிந்தாமணி, சுந்தரி, தந்தி ராதா போன்ற பத்திரிகைகளைத் தந்த சுயாதீன பத்திரிகை சமாசம் என்ற பெரிய பத்திரிகை நிறுவனம். திரு. இராஜதுரை அவர்களின் அன்பு வேண்டு கோளுக்கிணங்க அந்நிறுவனத்தின் அனுசரணையுடன் 1965ம் ஆண்டு 10ம் மாதம் 24ம் திகதி மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களும் கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவியும் மட்டக்களப்பு முற்றவெளி மைதானத்துக்கு வருகை தந்திருந்தார்கள். திரு. இராஜதுரையவர்களின் முயற்சியால் திரு.எம்.ஜி.ஆர். அவர்களையும் சரோஜாதேவியையும் மக்கள் நேரில் பார்க்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்தவர் இந்தச் சாதனையாளர் இராஜதுரை அவர்கள் என்றால் மிகையாகாது. எம்.ஜி.ஆரின் முதன் முதலான வெளிநாட்டு பயணமும் இதுவேயாகும்.

இராஜதுரை அவர்கள் உரையாற்றுவதையும் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் இவரின் அழகு தமிழை உன்னிப்பாக அவதானித்துக் கேட்டுக் கொண்டிருப்பதையும் அருகே



சரோஜாதேவியையும் படத்தில் காணலாம். இந்த நிகழ்ச்சிக்கு பின்பும் இவர்கள் இருவரின் உறவும் மேலும் வளர, குடும்ப நண்பர்களாகி விட்டார்கள்



(தென்னகத்து முதல்வரும் தேனகத்து முதல்வரும்)

மட்டக்களப்புக்கு எம்.ஜிஆர் வருகை தந்தபோது இராஜதுரையவர்களை அரவணைத்து கட்டித் தழுவிய போது எடுக்கப்பட்ட நிழற்படம். இராஜதுரையவர்களின் கடைசி மகன் திருமகன் ஸ்ரீயோடு எம்.ஜி.ஆர் அவர்கள் மிக அன்பைப் பொழிபவராக இருந்தார். திருமகனைக் கண்டால் அவர் அரவணைக்க தவறுவதேயில்லை.




(எம்.ஜி.ஆரும் திருமகன் ஸ்ரீயும்)

திரு.எம்.ஜி.இராமச்சந்திரன் திரு. இராஜதுரையின் குடும்பத்தின் மீது மிக பாசமுள்ளவராகவே இருந்தார். இராஜதுரையின் பண்பும் பணிவும் நன்றி மறவாத்தன்மையும் பிறரை நேசிக்கின்ற மனப்பாங்கும் எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் இராஜதுரையின் குடும்பத்தையே அவர் நேசித்தார்.

(மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களுடன் இராஜதுரையின் மகள் ரவீந்திரா தேவியும் மருமகனும்.)



# முஸ்லிம்கள் எதிர்நோக்கும் முக்கிய கோட்பாட்டு சிக்கல்



இது முஸ்லிம்களுக்கு நெருக்கடியான காலம். முஸ்லிம்களின் நெருக்கடிகளில் கால்பகுதி தற்காலிகமான சலசலப்புகள். இன்னொரு கால் பகுதி முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகள் சார்ந்தது. மிகுதி முஸ்லிம் தேசிய நிலைபாட்டை அசாத்தியமாக்குவதில் ஊர்வாதத்த்தின் வெற்றிகள் எனலாம்.

சலசப்புகளை புறக்கணிப்பதும் சலசலப்பின் பின்னே நகர்த்தபடுகிற பாதகமான அடிப்படை பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி செயல்படுவதும் முக்கியமானதாகும். ஆனால் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் வரலாற்று சிக்கல், தேசிய நலன்களை பிந்தள்ளி முழு இனத்தையே தோற்கடிக்கும் வகையில் ஊர்வாதம் பலபட்டு முன்நிலைப்படுவதாகும்.

முஸ்லிம்களின் உண்மையான சிக்கல் முஸ்லிம்களால் தேசிய நலன்களுக்கு ஊர் நலன்களை கீழ்படுத்தி செயல்பட முடியவில்லை என்பதாகும். உண்மையில் இது ஒரு அவல நிலையாகும். கல்முனைக்குடி சாய்ந்த மருதுது பிரதேச சபை பிரச்சினை கையாளபடும் விதம் இதற்க்கு நல்ல உதாரணமாகும்.

அடிப்படை பிரச்சினைகளை,

**கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்**

தேசிய பிரச்சினைகளை ஏனைய இனங்களோடு ஒப்பிடும்போது முஸ்லிம்களுக்கு முக்கியமான ஒரு தடை உள்ளது. முஸ்லிம்களின் தேசிய பிரச்சினைகளுக்கு ஊர்மட்ட மாவட்ட மட்ட பிரச்சினைகளை கீழ்படுத்தும் அரசியல் பொறிமுறை முஸ்லிம்கள் மத்தியில் செயல்படவில்லை. இது ஒரு இனத்தின் ஆபத்தான கையறு நிலைச் சிக்கலாகும். ஊர்வாதம் சந்தர்ப்ப வாதமாகும். தேசிய நலன்கள் அடிப்படையான சிந்தனை செயல்பாடு பொறிமுறையை உருவாக்காமல் முஸ்லிம்களுக்கு எதிர்காலமில்லை.

தமிழர்களின் தேசிய சர்வதேசிய அரசியலின் பலமே தமிழ் தேசிய நலன்களுக்கு முன் சகல ஊர் மட்ட பிரச்சினைகள் பிரமுகர்களும் கீழ்படுத்தப் பட்டிருப்பதுதான். முஸ்லிம்கள் இனியாவது இளைஞர்களாவது ஊர்களை தாண்டி தேசிய நிலைபாட்டை உருவாக்குவது பற்றி சிந்திக்க வேண்டும். வேறு மார்க்கமில்லை.



தொடர்ச்சி...


# கற்போம்

## மெண்டலின் பரிசோதனைகளின் விஞ்ஞான அடிப்படை மெண்டலின் தலைமுறையுரிமை (Mendelian Heredity/Mendelism)

குணம் சவரிராஜா

### ஒருகலப்புப்பிறப்பு அல்லது ஒற்றைக்கலப்புப் பிறப்பாக்கம்(Monohybrid cross)

Mendel, பூவின் நிறம் போன்ற ஒரு தனியான இயல்பைப் பின்பற்றியதன் மூலம் தலைமுறையுரிமையடைதல் சார்பான தனது முதலாவது விதியை உருவாக்கினார். நேர்மாறான இயல்புகளைக் கொண்ட தூயவழிவந்த பெற்றோர்களை இனங்கலத்தலின் மூலம் தனது பரிசோதனைகளை ஆரம்பித்தார். தூயவழிவந்த பெற்றோர்களில் இருந்து உற்பத்திசெய்யப்பட்ட F2 இன் அனைத்துத் தோன்றல்களும் ஒருகலப்புப்பிறப்புகள் (monohybrid) ஆகும். இதன் கருத்து, இனக்கலப்பில் பின்பற்றப்பட்ட குறிப்பிட்ட இயல்புக்கு அவை யாவும் இதரநுகமுடையவை என்பதாகும். ஒரு ஒருகலப்புப்பிறப்பிலிருந்து தோன்றும் இயல்புகளை அறிந்துகொள்ளுவதற்காக F1 கலப்புப்பிறப்பு பட்டாணித் தாவரங்கள் பின்னர் தன்மகரந்தச்சேர்க்கைக்கு அல்லது அயன்மகரந்தச்சேர்க்கைக்கு விடப்பட்டு F2 சந்ததி உற்பத்திபண்ணப்பட்டது.




உரு 6.1 இரண்டு சந்ததிகளுக்கூடாக ஒரு தனித்த இயல்பின் தலைமுறையுரிமைக்குரிய கோலங்களைக் கண்டறிவதற்கான Mendel இன் பரிசோதனைகள்

Mendel தனது பரிசோதனையின்போது தூயவழி ஊதாப்பூ, தாவரங்களையும் வெள்ளைப்பூத் தாவரங்களையும் இனக்கலந்தார். பின்னர் F1 கலப்புப்பிறப்புக்களை பிற F1 கலப்புப்பிறப்புக்களோடு தன்மகரந்தச்சேர்க்கையடைய அல்லது அயன் மகரந்தச் சேர்க்கையடையச் செய்தார். இறுதியாக பூக்களின் நிறத்திற்காக F2 சந்ததித்தாவரங்களை அவர் அவதானித்தார். அவரின் அவதானிப்பின்பொழுது எல்லா F1 தாவரங்களும் ஊதாப்பூக்களை உண்டாக்கின. எனினும் F2 சந்ததியில் ஊதாப்பூ தாவரங்களும் வெள்ளைப்பூ தாவரங்களும் ஏறத்தாழ 3:1 என்ற விகிதத்தில் தோன்றின.

F1 சந்ததியில்' கிடைத்த நுகங்களுக்கிடையே வெள்ளைப்பூக்களை உற்பத்திபண்ணுவதற்குப் பொறுப்பான "பரம்பரையடையும் காரணி "(heritable factor") ஊதாப்பூக்களை உற்பத்திபண்ணிய "பரம்பரையடையும் காரணியின்" முன்னிலையில் ஒடுக்கப்பட்டன. இதன் பெறுபேறாக, இதரநுகங்கள் யாவும் ஊதா பூக்களையே உற்பத்திசெய்து கொண்டிருந்தன. ஆகவே, ஊதா பூவிற்கான "பரம்பரையடையும் காரணி " வெள்ளைக்கு ஆட்சியாகும். (ஆட்சியான இயல்பு) இதன் பிரகாரம், வெள்ளைப்பூவிற்கான காரணி பின்னிடைவான இயல்பு எனக் குறிப்பிடப்படுகின்றது.

தலைமுறையுரிமைக்கோலம் மாறுபாடின்றி ஒரே மாதிரியாக வேறு ஆறு இயல்புகளில் நிகழ்ந்ததை Mendel அவதானித்தார். அவையாவன: பூவின் அமைவிடம், வித்தின் நிறம், வித்தின் வடிவம், பழத்தின் வடிவம், பழத்தின் நிறம் மற்றும் தண்டின் நீளம் என்பனவாகும்.


### Mendel இன் முதலாவது தலைமுறையுரிமையின் விதி: தனிப்படுத்துகை விதி (Law of Segregation)

பட்டாணித் தாவரங்களைப் பயன்படுத்தி ஒருகலப்புப் பரிசோதனைகளில் F2 எச்சங்களிடையே அவதானிக்கப்பட்ட 3:1 என்ற தலைமுறையுரிமைக் கோலத்தை விளக்குவதற்காக Mendel இன் முதலாவது விதி முன்வைக்கப்பட்டது.

அவரின் கருதுகோளின்படி, ஒவ்வொரு "பரம்பரையாகவரும் இயல்பும் எதிருருக்கள் (allele) என அழைக்கப்படும் இரண்டு "பரம்பரையாகவரும் இயல்புகளால்" தீர்மானிக்கப்படுகின்றது. புணரிகளின் தோற்றத்தின்போது, ஒரு "பரம்பரையாகவரும் இயல்பு"க்கான எதிருருக்கள் தனிப்படுத்தப்படுவதுடன், ஒவ்வொன்றும், தோற்றுவிக்கப்படும் ஒவ்வொரு புணரியினுள்ளும் செல்கின்றது. இது இப்பொழுது Mendel இன் தனிப்படுத்துகை விதி (Law of Segregation) அல்லது Mendel இன் தலைமுறையுரிமையின் முதலாவது விதி என அழைக்கப்படுகின்றது.

### புன்னற் Punett சதுரத்தைப் பயன்படுத்தி பிறப்புரிமையமைப்பு (genotype) மற்றும் தோற்றவமைப்பு (phenotype) விகிதத்தைப் பகுப்பாய்தல்

பட்டாணித்தாவரங்களில் உயரம் மற்றும் குறள் என்ற தண்டினது நீளங்களின் அடிப்படையில் வெவ்வேறான இரண்டு இயல்புகளை Mendel அவதானித்தார். அவருடைய பரிசோதனைகளுக்கு அயன் மகரந்தச்சேர்க்கைக்காக தூயவழி உயரமான மற்றும் தூயவழி குறளான தாவரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. பிற்பாடு F2 சந்ததியைப் பெற்றுக்கொள்ளுவதற்காக F1 சந்ததி




உரு 6.2 புன்னற் சதுரத்தின் உதவியுடன் மெண்டலின் தனிப்படுத்துகை விதி காண்பிக்கப்பட்டுள்ளது

தன்மகரந்தச்சேர்க்கைக்கு உட்படுத்தப்பட்டது.

F1 கலப்புப்பிறப்புக்களின் தன்மகரந்தச்சேர்க்கையின்போது, வெவ்வேறு எதிருருக்களைக் காவும் புணரிகள் எழுந்தமானமாகச் சேர்க்கையடைகின்றன. புணரிகளின் அத்தகைய எழுந்தமானமான சேர்க்கை, நான்கு பிறப்புரிமையியல்புக்குரிய சேர்க்கைகளுடான நுகங்களை உற்பத்திசெய்கின்றது. ஒரு Punnett சதுரம் இந்தச் சேர்க்கைகளைக் காண்பிப்பதற்குப் பயன்படுத்தப்படலாம். ஒரு Punnett சதுரம் என்பது ஒரு குறிப்பிட்ட கலப்பில் இனக்கலப்புச் செயன்முறையிலிருந்து தோன்றும் ஒரு எச்சத்தின் சாத்தியமான பிறப்புரிமையமைப்புக்களின் வரைபடம் மூலமான ஒரு சித்தரிப்பு ஆகும்.

## எந்த நாளும் நல்ல நாளே

இன்றுவாழும் நாளைவிட்டு நாளையென்ன நாளையென்று
எண்ணியெண்ணி ஏங்குகிறாய் மனமே – அது
என்றுவரும் வேளையென்று இன்றுநாளை விட்டுவிட்டு
ஏக்கத்தில் வாழுகிறாய் தினமே
அன்றுனக்கு வாய்த்தபொருள் அப்படியே விட்டுவிட்டு
அற்பனைப்போல் காணுகிறாய் கனவே – எது
நன்றுஎன்று நீநினைக்கத் தந்தசுகம் அத்தனையும்
நாளையெண்ணித் தொலைக்கின்றாய் நிஜமே

இன்றுவந்த காலையுந்தன் கையிலுள்ள வேலையென்று
இன்றேமுடி தேடிவரும் ஜெயமே – எது
இன்றுனக்கு வந்ததென்று அந்தநிலை கண்டுஇங்கு
ஏற்றபடி செய்திடுவாய் செயலே
சென்றுவிட்ட நாளும்வரும் ஒன்றுவிட்டநாளும் என்றும்
சேவைசெய்ய வாராது தெளிவே – நீ
அன்றுவந்த நாளைமட்டும் உண்மையென நம்பிவிடு
உன்கடமை செய்துவிடு முடிவே

நாளைவரும் சோற்றையெண்ணி இன்றுளையும் சேற்றைவிட்டால்
நாட்கள்முற்றும் பட்டினிதான் உனக்கே – ஒரு
வெள்ளைவேட்டிக் கற்பனையில் உள்ளசட்டை நீயும்விட்டால்
அம்மணமாய் தானேநிற்பாய் தனியே
பள்ளம்நோக்கி வெள்ளம்பாயும் போதுஅணை கட்டாவிட்டால்
பஞ்சம்தானே கோடையில் முடிவே – நல்ல
வேளைவரும் வேளைதன்னில் யாரிருப்பார் இவ்வுலகில்
வந்துநிற்கும் நாட்கள்மட்டும் நிஜமே

திரு.சிவலிங்கம்,
தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
மட்டக்களப்பு.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 41

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

### இலக்கணம்

1.பகுதி, விகுதி என்னும் இரண்டு உறுப்புக்களைக் கொண்ட பதமொன்றைத் தந்து பகுத்துக்காட்டுக.
வாழ (வாழ் + அ)

2.பகுதி. விகுதி, இடைநிலை என்னும் மூன்று உறுப்புக்களைக் கொண்ட பதமொன்றைத் தந்து பகுத்துக்காட்டுக.
செய்த (செய் + த் + அ)

3.பகுதி. விகுதி, இடைநிலை, சாரியை என்னும் நான்கு உறுப்புக்களைக் கொண்ட பதமொன்றைத் தந்து பகுத்துக்காட்டுக.
செய்தனன் (செய் + த் + அன் + அன்)

4.பகுதி. விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என்னும் ஐந்து உறுப்புக்களைக் கொண்ட பதமொன்றைத் தந்து பகுத்துக்காட்டுக.
அடித்தனன் (அடி + த் + த் + அன் + அன்)

5.பகுதி. விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறு உறுப்புக்களைக் கொண்ட பதமொன்றைத் தந்து பகுத்துக்காட்டுக.
கடந்தனன் (கட + ந் (த்) + த் + அன் + அன்)

6.கண்டான் என்பதைப் பகுத்துக்காட்டுக.
காண் + ட் + ஆன்

7.செத்தான் என்பதைப் பகுத்துக்காட்டுக.
சா + த் + த் + ஆன்

8.ஓடிக்கொண்டிருந்தான் என்பதைப் பகுத்துக்காட்டுக.
ஓடிக்கொண்டிரு + ந் (த்) + த் + ஆன்

9.பேசிக்கொண்டார்கள் என்பதைப் பகுத்துக்காட்டுக.
பேசிக்கொள் + ட் + ஆர்கள்

10.கேட்டான் என்பதைப் பகுத்துக்காட்டுக.
கேள் + த் + ஆன்

11.கற்றான் என்பதைப் பகுத்துக்காட்டுக.
கல் + த் + ஆன்

12.சென்றான் என்பதைப் பகுத்துக்காட்டுக.
செல் + ற் + ஆன்.

13.பெயர் இடைநிலைகளைக் குறிப்பிடுக.
ஞ், வ், ச், இச்சு, அ, ம்.

14.பெயர் இடைநிலைகள் ஒவ்வொன்றும் வருமாற்றை எடுத்துக்காட்ட ஒவ்வோர் உதாரணம் தருக.
ஞ்- கலைஞன், வ்- ஓதுவார், ச்- இடைச்சி, இச்சு– தச்சிச்சி, அ – மீனவன், ம்- கோமான்.

15.இறந்தகால இடைநிலைகளைக் குறிப்பிடுக.
த், ட், ற், இன், இ, ன்.

16.இறந்த இடைநிலைகள் ஒவ்வொன்றும் வருமாற்றை எடுத்துக்காட்ட ஒவ்வோர் உதாரணம் தருக.
த் - செய்தான், ட் - கண்டான், ற் - நின்றான், இன் - தேடினான், இ - ஓடியது, ன் - போனான்.

17.நிகழ்கால இடைநிலைகளைக் குறிப்பிடுக.
ஆநின்று, கின்று, கிறு.(ஆநின்று என்னும் இடைநிலை தற்கால வழக்கில் இல்லை)

18.நிகழ்கால இடைநிலைகள் ஒவ்வொன்றும் வருமாற்றை எடுத்துக்காட்ட ஒவ்வோர் உதாரணம் தருக.
ஆநின்று – நடவாநின்றான், கின்று - நடக்கின்றான், கிறு – நடக்கிறான்.

19.எதிர்கால இடைநிலைகளைக் குறிப்பிடுக.
ப், வ்.

20.எதிர்கால இடைநிலைகள் ஒவ்வொன்றும் வருமாற்றை எடுத்துக்காட்ட ஒவ்வோர் உதாரணம் தருக.
ப் - காண்பான், வ் - தேடுவான்.

21.பண்புப் பதங்கள் அடையும் விகாரங்கள் எத்தனை?
ஏழு.

22.பண்புப் பதங்கள் அடையும் விகாரங்களைக் குறிப்பிடுக.
ஈறு போதல், இடை உகரம் 'இ' ஆதல், ஆதிநீடல், அடி அகரம் 'ஐ' ஆதல், தன்னொற்று இரட்டல், முன்னின்ற மெய் திரிதல், இனம் மிகல்.

23.பண்புப் பதங்கள் ஐந்து தருக.
திண்மை, சிறுமை, வெம்மை, புதுமை, மேன்மை.

24.திண்மை, சிறுமை, வெம்மை, புதுமை, மேன்மை என்பனவற்றுக்கான எதிர்க்கருத்துப் பதங்களைத் தருக.
திண்மை – நொய்மை, சிறுமை – பெருமை, வெம்மை – தண்மை, புதுமை – பழைமை, மேன்மை – கீழ்மை.

25.திண்டோள், சிறிய, தண்ணீர், புத்தாக்கம், கீழோர் என்பனவற்றைச் சந்தி பிரித்து எழுதுக.
திண்மை + தோள், சிறுமை +அ, தண்மை +நீர், புதுமை + ஆக்கம், கீழ்மை + ஓர்.

# கற்போம்

## கணிதம்

திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட்/மமே/வவுணதீவு பரமேஸ்லரா வித்தியாலயம்.

### எளிய சமன்பாடுகளைத் தீர்த்தல்

சமன்பாடு ஒன்றின் “ = “ என்ற குறியீட்டின் இடப்பக்கப் பெறுமானமும் வலப்பக்கப் பெறுமானமும் சமனாகும்.

(1) $X + 3 = 5$

இங்கு $X + 3$ என்னும் அட்சரகணிதக் கோவை 5க்குச் சமனாகும். இடப்பக்கத்திலுள்ள 3ஐ நீக்குவதன் மூலம். தெரியாக் கணியம் X இன் பெறுமானத்தைப் பெறலாம்.

ஒரு சமன்பாட்டின் இரு பக்கங்களிலும் ஒரே பெறுமானத்தைக் கழிப்பதனால் இரு பக்கங்களிலும் பெறப்படும் புதிய பெறுமானங்கள் சமனாகும்.

$X + 3 = 5$
$X + 3 – 3 = 5 – 3$ (இரு பக்கமும் 3ஐக் கழிக்குக.)
$X + 0 = 2$ ( $3 – 3 = 0$ ஆகும்.)
$X = 2$ (பூச்சியத்துடன் X ஐக் கூட்டினால் விடை X ஆகும்.
ஆக, Xஇன் பெறுமானம் 2 ஆகும்.)

(2) $X - 2 = 7$

இங்கு $X - 2$ என்னும் அட்சரகணிதக் கோவை 7க்குச் சமனாகும். இடப்பக்கத்திலுள்ள 2ஐ நீக்குவதன் மூலம். தெரியாக் கணியம் X இன் பெறுமானத்தைப் பெறலாம்.

ஒரு சமன்பாட்டின் இரு பக்கங்களிலும் ஒரே பெறுமானத்தைக் கூட்டுவதனால் இரு பக்கங்களிலும் பெறப்படும் புதிய பெறுமானங்கள் சமனாகும்.

$X - 2 = 7$
$X - 2 + 2 = 7 + 2$ (இரு பக்கமும் 2ஐக் கூட்டுக.)
$X + 0 = 9$ ( $- 2 + 2 = 0$ ஆகும்.)
$X = 9$ (பூச்சியத்துடன் X ஐக் கூட்டினால் விடை X ஆகும்.
ஆக, Xஇன் பெறுமானம் 9 ஆகும்.)

(3) $3X = 6$

இங்கு Xஇன் பெறுமானத்தை 3ஆல் பெருக்கும் போது பெறப்படும் பெறுமானம் 6க்குச் சமனாகும்.

ஒரு சமன்பாட்டின் இரு பக்கங்களிலும் ஒரே பெறுமானத்தால் வகுக்கும் இரு பக்கங்களிலும் பெறப்படும் புதிய பெறுமானங்கள் சமனாகும்.

$3X = 6$

$3X/3 = 6/3$ (இரு பக்கமும் 3ஆல் வகுக்குக)

$X = 2$ ($3/3 = 1$ , $1 x X = X$ ஆகும்.)

$X/2 = 3$

இங்கு X இன் பெறுமானத்தை 2ஆல் வகுக்கும் போது பெறப்படும் பெறுமானம் 3க்குச் சமனாகும்.

ஒரு சமன்பாட்டின் இரு பக்கங்களிலும் ஒரே பெறுமானத்தால் பெருக்கும் போது இரு பக்கங்களிலும் பெறப்படும் புதிய பெறுமானங்கள் சமனாகும்.

(4) $X/2 = 3$

$2 x X/2 = 3 x 2$ (இரு பக்கமும் 2ஆல் பெருக்குக)

$X = 6$ ($2/2 = 1$ , $1 x X = X$ ஆகும்.)

பின்வரும் சமன்பாட்டில் ஓஇன் பெறுமானத்தைக் காண்க. (அடுத்த வாரம் விடையுடன் காத்திருங்கள்)

$X + 5 = 11$

$X - 7 = 5$

$4X = 20$

$X/5 = 4$

தொடர்ச்சி... (பக்கம் -15)

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## கிளிவெட்டியில் தமிழ்ப்பாடச் செயலமர்வு

ஆனந்தத்துடன் கற்பதற்கான மனநிலையை ஏற்படுத்திக் கற்பிக்கும் போது அவர்கள் தமிழின்மீது இயல்பாகவே பற்றும் ஆர்வமும் கொள்வார்கள் என்ற தமது கருத்தையும் முன்வைத்து மூதூர்க் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார். மேலும் தி /மூ/ கிளிவெட்டி மகா வித்தியாலய அதிபர் அவர்களும் பாடசாலைகள் சார்பில் நன்றி தெரிவித்தார்.

தொடர்ச்சி...

## போதையில் கார் ஓட்டுவோர் கைதாவர்

இதே வேளை மேல்மாகாண தெற்கு வாகன பிரிவு என்ற பெயரில் புதிய வாகன பிரிவு ஒன்று அமைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாணந்துறையில் இருந்து தெஹிவளை வரையிலும் ஹோமாகமயில் இருந்து கிருலப்பனை வரையிலும் ஹோமாகமயில் இருந்து மாலம்பே வரையிலும் கடுவலையில் இருந்து ஊர்கொடவத்தை வரையிலும் கொட்டாவையிலிருந்து ஆயர்வேத சுற்றுவட்டம் வரையிலும் மாலம்பேயிலிருந்து பொல்துவ சுற்றுவட்டம் வரையிலுமான பகுதிகள் இந்த பிரிவுக்குட்பட்டிருக்கும்.

இந்த பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் ஒருவர் செயற்படுவார். இதே வேளை வீதி நிரல் நடைமுறையை முன்னெடுத்த பின்னர் இதுவரையில் இந்த விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 5120 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி...

## “போதைப்பொருளை ஒழிக்க ஒன்று கூடுவோம்“



கையெழுத்திட்ட ஆரம்பித்துவைத்தார்.

இதன்போது போதைப்பாவனையினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த தெரு நாடகம் ஒன்று கிரான்குளம் யுகா கலைக்கழகத்தின் ஏற்பாட்டிலும், விழுதுகள் நிறுவனத்தினால் "போதைப் பாவனையினால் நாட்டிலே நாளாந்தம் ஏற்படும் சமூகச் சீரழிவுகள்" ஓரங்க நாடகமும் நடாத்தப்பட்டது.

போதைப்பொருள் தடுப்பு வாரத்தினை முன்னிட்டு மட்டக்களப்பில் பொது அமைப்புக்கள், பொதுமக்கள், இளைஞர்கள் ,யுவதிகள் இணைந்து மாவட்ட மதுவரித் திணைக்கள அதிகாரிகள், பொலிசாருடன் சட்டவிரோத மதுபாவனை,கசிப்பு உற்பத்திகளை பிடித்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு சட்டவிரோத செயற்பாடுகளை தடுத்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

வாகரை கட்டுமுறிவு கிராமத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் விழிப்புக்குழுக்கள் உருவாக்கப்பட்டு அக்கிராமத்தில் முற்றாக போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு போதையற்ற கிராமமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 1086 கிராமத்தில் போதைப்பொருள் தடுப்புவார நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி...

## முதலாவது பண்டைய தொழில்நுட்ப நூதனசாலையும் நூலகமும்



பண்டைய சுதேச தொழிநுட்பத்திற்குரிய நூதன பொருட்களை திரட்டி, அவற்றை அடுத்த தலைமுறைக்கு பாதுகாப்பாக வழங்கும் பொருட்டு ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கு அமைவாக இது அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

## பாடசாலைக்குள் அத்துமீறிச் ....

இந்தச் சம்பவத்தையடுத்து அக்மீமனப் பிரதேசத்தில் பதற்றம் நிலவியதுடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. பாடசாலை வழமைபோன்று இயங்கியதாகவும் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

தொடர்ச்சி...

## ரயில்வே வேலை நிறுத்தம்

போக்குவரத்து அமைச்சர் அர்ஜுனா ரணதுங்க மற்றும் இராஜாங்க அமைச்சர் அசோகா அபேசிங்க ஆகியோரை தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சந்தித்தனர். நேற்று பிற்பகலில் அவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வந்தன.

பேச்சுவார்த்தையின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் வேலை நிறுத்தத்தை முடித்துக்கொள்வது என்றும் வழமை போல பணியை ஆரம்பிப்பது என்றும் நேற்று மாலை அறிவித்திருந்தனர்.

தொடர்ச்சி...

## போக்குவரத்து பொலிசாரின் கைத் துப்பாக்கி பறித்துச் சென்றனர்

இன்றி வவுணதீவு பிரதேசத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது பொலிசார் அந்த மோட்டார் சைக்கிளை நிறுத்த முற்பட்டனர்., மோட்டர் சைக்கிளைச் செலுத்தி வந்தவர்கள் மோட்டர் சைக்கிளை திருப்ப முயன்ற போது வீதியின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த “படி” ரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இருவரும் காயமடைந்தனர்.

இதனையடுத்து அங்கு திரண்ட பொதுமக்கள் பொலிசார் மீது தாக்க முற்பட்டதாக பொலிஸார் கூறுகின்றனர். அப்போது. பொலிஸ் உத்தியோகத்தரின் இடுப்பில் இருந்த கைதுப்பாக்கி ஒன்றை இனம் தெரியாத ஒருவர் அபகரித்து தப்பிச் சென்றுள்ளார். இதனையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து விபத்தில் காயமடைந்த இருவர் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவ இடத்திற்கு பொலிசார் மற்றும் இராணுவத்தினர் விசேட அதிரடிப்படையினர் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அவர்கள் வவுணதீவு களப்பு பகுதியில் 9 பேரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

இதேவேளை புதூர் மற்றும் வவுணதீவு பகுதிகளில் மேவதிகமாக இராணுவத்தினர் பொலிசார் வரவழைக்கப்பட்டு அந்த பகுதிகளில் பாரிய சுற்றிவளைப்பு தேடுதல் மற்று விசாரணைகள் இடம்பெற்றன.

பத்திரிகை அச்சுக்கு சென்ற வேளையில் அங்கு ஒரு வகை பதற்ற நிலை காணப்பட்டது. மக்கள் அச்சத்தில் இருந்தனர்.

தொடர்ச்சி...

## வரலாற்றை மூடி மறைத்தலும் இட்டுக் கட்டலும்

ஏற்கனவே குறிப்பிட்ட மூவருமாவர். அதுபோன்ற நூல்களை இனிவரும் காலங்களில் எவரும் எழுதவும் முடியாது. தமிழ் அரங்கினதும் ஈழத்து அரங்கினதும் பொக்கிசங்கள் அவை. அதுமட்டுமன்றி பேராசிரியர்.சி.மௌனகுரு அவர்கள் இன்றுவரை அரங்கச் செயற்பாட்டில் காத்திரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கும் உலகறிந்த ஒருவர். இவ்வாறான அரங்க ஆளுமைகளை 'நேற்றுப் பெய்த மழைக்கு இன்று முளைத்த காளான்கள்' தமது குடையால் மூடிமறைக்க நினைப்பது சூரியனை உள்ளங்கையால் மறைக்க முயல்வதற்கு ஒப்பானதாகும்.

இவ்வாறு வரலாற்றை மூடி மறைப்பவர்கள் மாணவர்களுக்கு நேர்மையான கற்பித்தல்களையும் ஆய்வு வழிகாட்டல்களையும் எவ்வாறு வழங்க முடியும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. ஆய்வு நேர்மையாக இருக்க வேண்டும் என மாணவர்களிடம் கேட்டுக் கொள்ளும் யோக்கியத்தை இவர்கள் இழந்து விடுகிறார்கள். சில வேளைகளில் கட்டுரையாளரால் குறிப்பிடப்படும் காலனீய நீக்க செயற்பாடும் சுதேசிய ஆய்வறிவு முறையும் தமக்கு ஒவ்வாதவர்களின் பங்களிப்புகளை மூடி மறைத்து தமக்குத் தேவையானவர்களை வரலாற்றில் உருவாக்குவதுதானோ என எண்ணத்தோன்றுகின்றது.

காலனித்துவம் பற்றி மிகக் கறாரான விமர்சனங்களை முன்வைக்கும் கட்டுரையாளர்; அந்தக் காலனித்துவக் கட்டுமானங்களுக்குள் நின்றுதான் தனது கதையாடலை செய்துள்ளார் என்பது மற்றுமொரு முரண்நகையாகும். காலனித்துவம் எமக்கு பன்மைத்துவத்தினைக் கற்றுத்தரவில்லை, ஒருமைத்துவத்தினையும் மையவாதத்தினையுமே கற்றுத் தந்தது. அவ்வாறே எமது வரலாறுகள் எழுதப்பட்டன அதனை அடிப்படையாகக் கொண்டே கதையாடல்கள் உருவாக்கப்பட்டன. ராஜராஜ சோழன் தஞ்சைப் பெரிய கோயிலை கட்டினான் என்பது இதற்கு உதாரணமாகும்.

கட்டுரையாளர் இதனையொத்த ஒரு வரலாற்றையே உருவாக்க முனைகின்றார். அதாவது பலபேருடைய உழைப்பை மறுத்து கலாநிதி.சி.ஜெய்சங்கர் வருகை தரு கலைஞர்களாக அண்ணாவிமார்களை நியமித்தார் என்பதாகும். ஓர் உயர் கல்வி நிறுவகத்துக்கு எடுத்தவுடன் அண்ணாவிமாரை வருகை விரிவுரையாளர்களாக நியமிக்க முடியாது. அதற்கான பாடத்திட்டங்கள் அங்கு இருத்தல் வேண்டும். சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கூத்து பாடத்திட்டமாக உருவாகியதற்கு ஒரு வரலாறு இருக்கின்றது. பேராசிரியர். சு.வி.பல்கலைக் கழகத்தில் கூத்துக்களை தயாரித்தார். அவர் அரங்கியலையே பாடமாகக் கொண்டுவரவில்லை. அதன்பின்பு பேராசிரியர் கா.சிவத்தம்பி யாழ்ப்பாண நுண்கலைத்துறைத் தலைவராக இருந்தபோது அங்கு நாடகமும் அரங்கியலும் எனும் பாடத்தினைக் கொண்டுவந்தார். அங்கு கூத்து கொண்டுவரப்படவில்லை இதனுடைய நீட்சியாக பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் சு.வி.அ.க.நிறுவகத்தின் பதில் பணிப்பாளராக இருந்து பாடவிதானத்தினை வரைந்தபோது கூத்தை ஒரு பாடமாக சேர்த்துக்கொண்டார். இதனை அவரிடம் ஒழுங்கு முறையாக கூத்துப்பயின்று அங்கு விரிவுரையாளர்களாக இருப்பவர்கள் கற்பித்தனர். அந்த விரிவுரையாளர்கள் கற்பிப்பதற்குப் பதிலாகவே கலாநிதி.சி.ஜெய்சங்கர் அண்ணாவிமார்களை வருகைதரு கலைஞர்களாக அழைத்து கற்பித்தல்களை மேற்கொண்டார். இந்தக் கற்பித்தலின் சரிபிழைகள் தொடர்பாக விமர்சனம் மாணவர்களிடத்திலும் அங்கு ஏற்கனவே கூத்துப் பயிற்றுவித்த விரிவுரையாளர்களிடத்திலும் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது.

இன்று ஆய்வறிவும் படைப்பாற்றலும் இல்லாத சிலர் கூத்துக்களை தங்களுடைய கவசமாகக் கொண்டு தங்களுடைய இருப்பை தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த தக்கவைத்தலின் வெளிப்பாடு பலவடிவங்களில் வெளிப்படுகின்றது. உண்மையான வரலாறுகள் மூடிமறைக்கப்படுவதையோ போலியான வரலாறுகள் கட்டமைக்கப்படுவதையோ எந்த வகையிலும் அங்கீகரிக்க முடியாது.

எனவே முடிவாக இந்தச் சமூகம் கல்வியாளர்களிடம் இருந்து நிறைய எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றது. அதனை இதய சுத்தியுடன் செய்வதற்கு கிழக்குப் பல்கலைக் கழக கல்வியாளர்கள் முன்வர வேண்டும் என்பது இந்தச் சமூகத்தின் எதிர்பார்க்கையாகும்.

AGNI PULAYAVELY INDUSTRIES

# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு



## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

100 கிராம் 60 ரூபாய்

200 கிராம் 110ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 300ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa